# திருமறைத்தீபம்



# திருமறைத்தீபம் 10-ம் ஆண்டு நிறைவு விழா



















# பக்திக்கு விரோதி பாரம்பரியம்

பாரம்பரியத்திற்கும், சம்பிரதாயங்களுக்கும் மனிதர்கள் கொடுக்கும் மரியாதை தமிழினத்தில் அதிகம். தாத்தா காலத்தில் இருந்து வருகிற வழக்கமென்றும், நூறுவருட பாரம்பரியமென்றும் சொல்லி பாரம்பரியத்தில் இன்பம் காண்பார்கள் நம்மினத்தவர்கள். பாரம்பரியமாக நடந்து வருகிற ஒரு காரியம் நல்லதா? கெட்டதா? என்ற வித்தியாசம் பார்க்காமல் அது ஆண்டாண்டு காலமாக இருந்து வருகிற ஒரு காரியம் என்பதற்காக அதற்கு மரியாதை தந்து சிந்தனையில்லாமல் ஆதரித்து வருகிறது தமிழினம். அதை ஒழித்து விட்டால் எத்தனையோ நன்மைகள் வருகின்ற வாய்ப்புகள் இருக்கின்ற போதும், அது பாரம்பரியமாக இருந்து வருகிற ஒரே காரணத்துக்காக வரப் போகிற நன்மைகளையும் இழக்கத் தயாராக இருக்கும் கண்மூடித்தனமான வழக்கத்தைப் பின்பற்றுகிறது நமது சமுதாயம். பாரம்பரியத்தோடு சேர்ந்தவைதான் சடங்குகளும், சம்பிரதாயங்களும். நம் மக்கள் தொடர்ந்தும் இருட்டில் இருந்து இளைய சமுதாயம் வளர வழியில்லாமல் இருப்பதற்கு இந்தப் பாரம்பரியமும், சடங்குகளும், சம்பிரதாயமும் பெரிய இடையூராக இருப்பதை எவராலும் மறுக்க முடியாது.

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கு முன்பு நான் புறஜாதிக்காரனாக வாழ்ந்த காலத்தில் சிறு வயதில் எங்களுடைய சாதி வழக்கத்துக்கு மாறாக நான் மீசை வைக்கப்போய் என்னுடைய தகப்பனாருக்கு மாரடைப்பே வந்தது பழைய கதை. ஒன்று நல்லதா? கெட்டதா? அதால் நன்மையுண்டா? கேடு வருமா? என்றெல்லாம் சிந்திக்காமல் பாரம்பரியமாக செய்து வருகிறதை ஒருபோதும் மாற்றக்கூடாது என்ற எண்ணத்தில் கிணற்றுத் தவளையாக வாழ்ந்து வருகிறார்கள் நம்மக்கள்.

நல்ல பாரம்பரியங்களை தொடர்வதில் என்ன தவறு? என்று யாராவது கேட்கலாம். நல்ல கேள்விதான். கேட்கிறவர்கள் ஒருமுறை கருத்தோடு சிந்தித்துப் பார்த்து நமது பாரம்பரியங்களில் எத்தனை நல்லவை என்பதை பட்டியல் போட்டு யாராவது சொல்லுவார்களா? நமது பாரம்பரியங்களில் நன்மை இருக்கிறதா? என்றாவது நாம் எப்போதாவது சிந்தித்துத்தான் பார்த்திருக்கிறோமா? பாரம்பரியமாக இருந்து வருகிற காரியம் என்ற உடனேயே நாம் அதைப்பற்றி எந்தக் கேள்வியும் கேட்பதற்கே நடுங்கவல்லவா செய்கிறோம். நல்லவையும், பயனுள்ளவையும் நிலைத்திருக்க வேண்டியது அவசியந்தான். பயனில்லாதவற்றை அவை காலங்காலமாக இருந்துவருகின்றன என்ற ஒரே காரணத்துக்காக

தொடர்ந்து பின்பற்றுவதில் என்ன நன்மையிருக்கிறது? கர்த்தருடைய வேதத்தோடு சம்பந்தமில்லாத எந்தப் பாரம்பரியமும், அது எவர் மூல மாக வந்திருந்தாலும் கடப்பாறை வைத்து இடித்துத் தள்ள வேண்டும். இல்லாவிட்டால் அது கிறிஸ்தவ சமுதாயத்தையே சீரழித்து விடும்; ஜீவனில்லாததாக்கிவிடும்.

## கிறிஸ்தவர்களும் பாரம்பரியமும்

கர்த்தரை அறியாதவர்கள் மத்தியில் இருந்து வருகிற இந்தப் பாரம் பரியக் கொடுமை கிறிஸ்தவத்தைப் பாதிக்காமல் இல்லை. தமிழினத்தில் கிறிஸ்தவம் புறஜாதி வழக்கங்களையும், பண்பாட்டையும் தொடர்ந்து பின்பற்றி வருகின்ற கொடுமையை நாம் ஏற்கனவே பத்திரிகையில் விளக்கியிருக்கிறோம். கிறிஸ்துவுக்கு அடுக்காத இந்தப் புறஜாதி வழக்கங் களும், பண்பாடும் தொடர்கின்ற கொடுமை போதாதென்று பாரம் பரியம் என்ற பெயரில் யாரோ எப்போதோ ஏற்படுத்தி வைத்துள்ள வழிமுறைகளைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றி ஆத்மீக விருத்திக்கே வழியற்ற நிலையில் தமிழினத்தின் சபைகள் இருந்து வருகின்றன. ஆத்துமவிருத்தியைவிட இந்தப் பாரம்பரியங்களைத் தொடர்வதிலேயே இந்தச் சபைகள் அதிக அக்கறை காட்டுகின்றன. இந்தச் சபைகள் ஆத்துமவிருத்தியில்லாது, ஜீவனில்லாது இன்றிருப்பதற்கு பாரம்பரியமே பெரிய இடையூராக இருந்து வருகின்றது.

பியூரிட்டன் பெரியவர்களின் காலமான பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில், இங்கிலாந்து சபை, ஜோன் ஹூப்பர் (John Hooper) என்ற பியூரிட்டன் பெரியவருக்கு திருச்சபையில் போதகர் பதவி அளிக்க முன்வந்தது. ஹூப்பர் அதற்கான அத்தனை தகுதிகளையும் கொண் டிருந்தார். அத்தோடு, இங்கிலாந்து சபை ஹூப்பருக்கு வேறு சில நிபந்தனைகளையும் விதித்தது. அதாவது போதகர் பதவியில் இருக்கின்ற போது அவர் அதற்கான சில வெளிப்புற சாதனங்களைப் பின்பற்ற வேண்டும் என்று இங்கிலாந்து சபை வற்புறுத்தியது. ஹூப்பர் அணிந்து கொள்ள வேண்டிய அங்கி மற்றும் பின்பற்ற வேண்டிய சில வழிமுறை களே அவை. நம்மவர்கள் சிந்திக்காமலேயே இதற்கெல்லாம் உடனே தலையாட்டி விடுவார்கள். ஆனால், ஹூப்பர் அப்படிச் செய்யவில்லை. அவர் பின்பற்ற வேண்டுமென்று இங்கிலாந்து சபை எதிர்பார்த்த காரியங்களுக்கும் வேதபோதனைகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லாம லிருந்ததைக் கவனித்தார். தொடர்பில்லாதது மட்டுமல்ல வேதரீதியில் போதகப் பணியைச் செய்வதற்கு அவை பேரிடையூறு என்பதையும் உணர்ந்தார். அவருக்கு அது வெறும் அங்கிப் பிரச்சினையாகத் தெரிய வில்லை. அதனால் ஹூப்பர் அவற்றைப் பின்பற்ற மறுத்தார். திருச் சபையையும், அரசையும் எதிர்த்து சிறைத்தண்டனையையும், மரணத்தை யும் வரவேற்றார். பாரம்பரியம் அந்தக் காலத்தில் எந்தளவுக்கு திருச் சபையை கொலைகாரக்கூட்டமாக வைத்திருந்தது என்பதை சபை வரலாற்றை வாசித்தால் தெரிந்து கொள்ளலாம்.

பாரம்பரியத்தைப் பாரம்பரியம் என்பதற்காக ஏற்றுக்கொள்ள மறுத்து வேத போதனைகளின்படி கர்த்தருக்கு மகிமையளிப்பவைகளை மட்டுமே திருச்சபைகள் பின்பற்ற வேண்டும் என்ற வைராக்கியத்தோடு உயிரையும் பணயம் வைத்து ஹூப்பர் போன்றவர்கள் உழைத்ததால் தான் இன்றைக்கு நாம் ஓரளவுக்காவது மெய்க்கிறிஸ்தவத்தை தமிழினத்தில் இங்கும் அங்குமாகப் பார்க்க முடிகிறது. இந்தப் பாரம்பரியப் பேய் நம்மை மோசம் செய்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் நமது சீர்திருத்தப் பெரியவர்கள் 1689 விசுவாச அறிக்கையையும், வழிபாட்டு முறைக்கான கோட்பாடுகளையும் எழுதி வைத்தார்கள். விசுவாச அறிக்கையில் 21, 22 ஆகிய அதிகாரங்கள் மிக முக்கியமானவை. கிறிஸ்தவ சுதந்திரத்தையும், மனச்சாட்சியின் சுதந்திரத்தையும் பற்றியது 21 வது அதிகாரம். அந்த அதிகாரத்தில் பின்வரும் வாசகங்களை நமது பெரியோர்கள் எழுதி வைத்தார்கள்: "கடவுள் மட்டுமே மனச்சாட்சியின் ஆண்டவராக இருக்கிறார். அவருடைய வார்த்தைக்கு எதிரான, அதில் அடங்கியிராத, சாதாரண மனிதர்களின் எந்தப் போதனைகளின் நிர்ப்பந்தத்திற்கும் நாம் உட்படவோ, அவற்றிற்குக் கீழ்ப்படியவோ அவசியமற்று அனைத்துக் கட்டுப்பாடுகளில் இருந்தும் நமது மனச்சாட்சிக்கு அவர் விடுதலை அளித்துள்ளார். அத்தகைய போதனைகளை ஏற்று அந்நிர்ப்பந்தங்களுக்குக் கட்டுப்படுவது மெய்யான மனச்சாட்சியின் சுதந்திரத்தைக் காட்டிக் கொடுக்கும் செயலாகும். மனிதர்கள் சக மனிதர்களை கண்மூடித்தனமாக, கேள்வி முறையற்ற கீழ்ப்படிவிற்கு உட்படுத்த முனைவது நியாயமற்றதும், மெய்யான கிறிஸ்தவ சுதந்திரத்தை அழிக்கும் செயலுமாகும்."

மேலே நாம் பார்த்த வாசகங்கள் அருமையானவை. சீர்திருத்தவாத பெரியவர்கள் மனிதர்களின் வேதத்திற்கு விரோதமான போக்குகளுக்கும், வழிமுறைகளுக்கும் இடங்கொடுக்காமல் நாம் வாழ்வதற்காக நம்மை எச்சரித்து இந்தப் பொன்னான வாசகங்களை எழுதி வைத்தார்கள். இதைத் தெளிவாக விளங்கிக் கொள்ளுவது அவசியம். இவை கடவுளுக்கும், மற்றவர்களுக்கும் நாம் கீழ்ப்படிவதைத் தடைசெய்யவில்லை. கர்த்தருக்குக் கீழ்ப்படிகிற நாம் அவருடைய வார்த்தையின்படி சபைகளுக்கும், போதகர்களுக்கும் கீழ்ப்படிய வேண்டியவர்களாக இருக்கிறோம். அதில் எந்தவித சந்தேகமுமில்லை. ஆனால், இந்த வாசகங்கள் நாம் கர்த்தரின் வார்த்தைக்கு விரோதமான அல்லது அவருடைய வார்த்தையோடு தொடர்பில்லாத வெறும் போலிப் பாரம்பரியங்களும், சடங்குகளும், அவை எவர் மூலமாகவும், எங்கிருந்து வந்தாலும் அவற்றிற்கு நாம் கீழ்ப்படியக்கூடாது என்பதையே விளக்குகின்றன. நமது மனச்சாட்சி கர்த்தருக்கும், அவருடைய வார்த்தைக்கும் மட்டுமே கட்டுப்பட வேண்டும். அப்படிக் கட்டுப்படுகிறவிதமாக நமது மனச்சாட்சி இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்ள வேண்டியது நமது கடமை. இதை மீறி சபையினுடையதும், பிசப்புக்களினுடையதும் வேதத் தொடர்பில்லாததும், வேத விரோதமானதுமான நடவடிக்கைகளுக்கு

நமது மனச்சாட்சி கீழ்ப்படியக்கூடாது. அப்படிக் கீழ்ப்படிவது நமது கிறிஸ்தவ சுதந்திரத்தை பிசாசுக்கு அடகு வைக்கிற செயலாகும். அது மட்டுமல்லாமல் கர்த்தரை அவமதிக்கின்ற செயலுமாகும். இதையே மேலே நாம் பார்த்த வாசகங்கள் சுட்டிக்காட்டுகின்றன. கிறிஸ்தவ சுதந்திரம் பற்றிய இந்தப் போதனைகளின் அடிப்படையிலேயே அடுத்த அதிகாரம் கர்த்தரின் வழிபாடு பற்றிய போதனைகளையும் தருகிறது.

## தமிழ் கிறிஸ்தவர்களைப் பாரம்பரியம் படுத்தும் பாடு

மேலே நாம் பார்த்த வேதபோதனைகளை மீறி இன்றைக்கு பாரம் பரியத்தைப் பின்பற்றி யாரோ மனிதர்கள் ஏற்படுத்தி வைத்தார்கள் என்பதற்காக தமிழ்த் திருச்சபைகளில் போதகப் பணி செய்கிறவர்கள் தங்களை பிசப்புக்கள் என்று அழைத்துக் கொண்டு, கர்த்தருக்கு விரோத மான கத்தோலிக்க மதகுருக்களைப் போன்ற அங்கிகளை அணிந்து கொண்டு சபைகளில் ஆத்துமாக்களைவிட மிக உயரமான நிலையில் இருந்து பாரம்பரியத்துக்கும், சடங்குகளுக்கும் பணி செய்து வருகிறார் கள். இவர்களில் பெரும்பாலானோர் மனந்திரும்புதலையும், இரட்சிப் பின் அனுபவத்தையும் அடையவில்லை என்பது நாடறிந்த உண்மை. மிகுந்திருப்பவர்களுக்கு வேதமே தெரியாது. இவர்கள் அரசரடி இறையியல் (நிந்தனை) கல்லூரியிலும், சென்னை ஹிந்துஸ்தான் வேதாகமக் கல்லூரியிலும், எஸ்ரா சற்குணத்தின் சென்னை இறையியல் கல்லூரியிலும், யூனியன் பிபிலிக்கள் செமினரியிலும் இறை நிந்தனை செய்யக் கற்றுக்கொண்டு பாரம்பரியத் திருச்சபைகளை அலங்கரித்து வருகிறார்கள். (மேற்குறிப்பிட்ட இறையியல் கல்லூரிகள் எல்லாம் வேதத்தை முழுமையாக நம்புவதில்லை.) பிரசங்க ஊழியத்துக்கு எந்த மதிப்பும் கொடுக்காமல் வெறும் சடங்குகளை மட்டும் சபைகளில் தொடர்ந்து நடத்தி வைத்து இவர்கள் ஆத்துமாக்களை இருட்டில் வைத் திருக்கிறார்கள். இவர்களுக்கும் கிறிஸ்துவுக்கு எதிரிகளான பரிசேயர் களுக்கும் எந்த விதமான வேறுபாடும் இல்லை. நவீன பரிசேயர்களான இந்த பிசப்புக்கள் வேதவிரோதிகள். சிந்திக்க மறுத்து இவர்களைப் பின்பற்றி வருகிற எவரும் மெய்விசுவாசிகளாக இருக்க முடியாது.

முழங்காலிட்டு ஜெபிப்பதும், சிலுவைக் குறியிடுவதும், பொறுக்கி யெடுத்த சில வார்த்தைகளை திரும்பத் திரும்ப உணர்ச்சியே இல்லாது ஜெபம் என்ற பெயரில் சபைகளில் சொல்லுவதும், எதற்கெடுத்தாலும் “ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம்” என்று மந்திரம் ஓதுவது போல் அடிக்கடி சொல்லுவதும், ஆல்டரைப் பார்த்து வணங்குவதும், சடங்குபோல் முழு இரவு ஜெபக்கூட்டம் நடத்துவதும், மெழுகுவர்த்தி ஏற்றி ஜெபிப்பதும், வெள்ளை நிற உடை அணிவதும், லெந்து நாட்களில் உபவாசம் செய்து அக்காலங்களில் மீசை தாடியை சிரைக்காமலும், அசைவ உணவுகளை உண்ணாமலும், பெண்கள் தலையில் பூ வைக்காமலும், இக்காலங்களில் திருமணம் போன்ற வேறு நல்ல காரியங்களைச் செய்யாமலும் இருப் பது போன்ற அநேக சடங்குகள் பாரம்பரியமாக திருச்சபையாரை

ஆட்டிப்படைத்து வருகின்றன. குருத்தோலை ஞாயிறு தினத்தில் தென்னை மர ஓலையில் செய்யப்பட்ட சிலுவையொன்றை சபைக்கு வருகிற எல்லோருக்கும் கொடுப்பதும் வழக்கம். அதைப் பெற்றுக் கொள் கிறவர்கள் வீட்டில் அதைப் பத்திரமாக பாதுகாத்து வைப்பார்கள். இதன் மூலம் வாழ்க்கையில் நன்மைகள் நிகழும் என்பது அவர்களின் நம்பிக்கை.

தஞ்சாவூரில் சி. எஸ். ஐ சபைகளில் வருடத்தில் இரண்டு நாட்கள் தவிர ஏனைய அனைத்து நாட்களிலும் திருவிருந்து கொடுத்து வருகி றார்கள் என்று அறிந்தேன். இப்படிச் செய்யும்படி கர்த்தர் வேதத்தில் எந்த இடத்திலும் சொல்லவில்லை. சடங்காக இந்தச் செயல் பாரம் பரியமாக இங்கே நடந்து வருகின்றது. அத்தோடு பிறந்த பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுப்பதோடு அப்பிள்ளைக்கு ஒரு ஞானத் தாயை யும், ஞானத் தகப்பனையும் நியமிப்பதும் சடங்காக நம்மத்தியில் இருந்து வருகிறது. இந்த வழக்கம் கர்த்தருக்கு விரோதியான கத்தோலிகக மதம் ஏற்படுத்திய சடங்கு என்ற அறிவு கொஞ்சமும் இல்லாமல் கிறிஸ்த வர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளுகிறவர்களும், சபைகளும் இவற்றைப் பின்பற்றி வருகின்ற கொடுமையை நம்மினத்தில் தொடர்ந்து பார்க்கிறோம். இதெல்லாம் போதாதென்று குடித்து வெறித்து தன் நிலையை உணராமல் சபைக்கு வருகிறவர்களுக்கு திருவிருந்து கொடுக் கிற திருகுதாலம் பல சபைகளில் நடந்து வருகின்றது. பாரம்பரிய, பெயர் கிறிஸ்தவ சபைகள் எந்தளவுக்கு மோசமாக இருக்கின்றன என்ப தற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

இன்னும் சொல்லப் போனால் சிலுவையை சுமப்பதும், அதை மதித்து ஆராதிப்பதும், கிறிஸ்துமஸ் பண்டிகையையும், லெந்து காலத்தையும், உயிர்த்தெழுந்த நாளையும் பெரிதுபடுத்தி அவற்றை விழா போலக் கொண்டாடுவதும் நம்மினத்தில் சகஜம். இவை சபைகளில் பாரம்பரியமாக நடந்துவருகிற நிகழ்ச்சிகளாக மாறி வெறும் சடங்கு களாக சபைகளை அலங்கரித்து வருகின்றன. சிலுவையை வைத்து அநேகர் செய்து வருகிற கொடுமைக்கு எல்லையே இல்லை. அதற்கு மாலை போட்டு வைப்பதில் இருந்து தோலில் சுமந்து நடப்பதுவரை அநேக வழிபாடுகள் நடத்தப்பட்டு வருகின்றது. சிலுவையைத் தோளில் சுமந்து தெருவில் நடப்பதால் ஆத்மீக விருத்தி அடைந்த மனிதன் உலகத்தில் இருந்ததில்லை. அதை சுமப்பது ஆத்மீக விருத்திக்கு அடை யாளம் என்று கர்த்தர் ஒருபோதும் வேதத்தில் சொன்னதில்லை. மாறாக அப்படி சிலுவையை வழிபடுவது தன்னை இகழ்கின்றதும், நிராகரிக் கின்றதுமான செயலாகவே அவர் கருதுகிறார். பத்துக்கட்டளைகளில் முதல் மூன்றும் மனிதன் சிலுவையை வழிபடுவதைத் தடை செய்கின்றன. பாரம்பரியத்துக்கு அடிமைப்பட்டுப்போன மனிதர்கள் ஆத்தும விருத்தி யில்லாமல் இன்று சிலுவையைக் கர்த்தராக வணங்கி வருகிறார்கள்.

பழைய ஏற்பாட்டு யூதர்கள் கர்த்தருக்கு விரோதமாக சிலை ஏற்படுத்

*தியதும் இதுவும் ஒரேவிதமானதே. மோசே வனாந்தரத்தில் யூதர்களை விஷப்பாம்புகளில் இருந்து காப்பாற்ற ஏற்படுத்திய வெண்கலப் பாம்பை பின்பு இஸ்ரவேலர் கடவுளாகப் பயன்படுத்தி அதற்கு தெய் வீக ஆராதனை செய்து வந்தார்கள். அது பொறுக்காமல் எசேக்கியா தான் அரசனானவுடன் நாட்டில் வழிபாட்டுச் சீர்திருத்தத்தை ஏற்படுத் துவதற்காக முதலில் அந்த வெண்கலப் பாம்பை சிதறும்படி உடைத் தெறிந்தான். இன்று சிலுவை அந்த வெண்கலப் பாம்புபோல் ஆத்துமாக் களுக்கு கர்த்தராக இருந்து வருகின்ற கொடுமையை கர்த்தர் சகித்துக் கொள்ள மாட்டார்.*

*இவை மட்டுமா? யாருக்காவது காலில் கையில் அடிபட்டுவிட்டால் உடனே அடிபட்ட இடத்தில் சிலுவைக் குறியிடுவதும், இயேசு கிறிஸ்து என்று எழுதுவதும் பலருடைய வழக்கம். இதனால் காயம் குணமாகும் என்ற போலி நம்பிக்கையை அவர்கள் வளர்த்துக் கொண்டிருக்கிறார் கள். இந்துக்கள் தாங்கள் நினைத்த காரியம் கைகூட பல தடவைகள் திரும்பத் திரும்ப ஸ்ரீ ராமஜெயம் எழுதுவதுபோல் கிறிஸதவர்களிலும் அநேகர் இயேசுவின் இரத்தம் ஜெயம் என்று எழுதி வருகின்றனர். இரவு படுக்கப்போவதற்கு முன்பு கதவு, யன்னல்களில் எல்லாம் சிலுவைக் குறியிடுகிறவர்களும் அதிகம். இப்படிச் செய்தால் வீடு பாது காக்கப்படும் என்பது அவர்களின் தவறான நம்பிக்கை.*

*சடங்குகளும், சம்பிரதாயங்களும், பாரம்பரியமும் வேறு பலவிதங் களிலும் நம்மக்களை ஆட்டிப்படைத்து மெய்க்கிறிஸ்தவ அனுபவத்தை அவர்கள் வாழ்க்கையில் அடைய முடியாதபடி செய்து வருகின்றன. திருமண வைபவத்தில் தாலியை எல்லோரும் ஆசீர்வாதம் செய்வதற் காக திருமண மண்டபம் முழுவதும் அனுப்பி வைத்தல், தாலியில் சிலுவை வடிவத்தில் டாலர் செய்வது போன்ற சம்பிரதாயங்கள் மூட நம்பிக்கையாக வளர்ந்திருக்கின்றன. நாள் பார்ப்பது, நல்ல நேரம் பார்ப் பது போன்ற புறஜாதி வழக்கங்களும் கிறிஸ்தவத்தின் பெயரில் நடந்து வருகின்றன. இவை மட்டுமா? பெண் குழந்தைகள் வயதுக்கு வந்துவிட் டால் ஜெபக்கூட்டம் வைத்து அதைக் கொண்டாடுவது இந்து மதத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வழக்கம். திருமணமான பெண் கள் கர்ப்பந்தரித்து ஏழாவது அல்லது எட்டாவது மாதத்தில் வளை காப்பு நடத்தி விருந்து வைப்பதும் இந்துப் பண்பாட்டில் இருந்து வந்தி ருக்கிற சடங்கே. குழந்தைக்கு மொட்டையடிப்பது, தாய்மாமன் மடியில் வைத்து அதைச் செய்வது எல்லாம் புறஜாதி வழக்கங்களே. புது வீடு கட்டினால் நிலைக்கதவுகளில் புறஜாதியானைப்போல கோழி இரத்தத் தைப் பூசி, சங்காரக்காரன் நம் வீட்டை ஒன்றும் செய்ய மாட்டான் என்று நம்பி வருகிற போலிக் கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள்.*

## கிருபையின் சாதனங்கள் சடங்காக மாறிவிடுகின்ற கொடுமை

*ஜெபிப்பது விசுவாசிகளுக்கு கர்த்தர் கொடுத்திருக்கும் கிருபையின் சாதனங்களில் ஒன்று. ஜெபிப்பதன் மூலம் நாம் கர்த்தரோடு பேச*

முடியும். ஜெபிப்பதற்கு நேரங்காலந் தேவையில்லை. ஜெபத்தை நாம் கருத்தோடு, கர்த்தரின் வார்த்தையின்படி செய்ய வேண்டும். நம்முடைய சுயநல நோக்கங்களோடும், கர்த்தரைக் காரியங்கள் செய்ய வைக்கும் எண்ணத்தோடும் தவறான முறையில் பயன்படுத்தக்கூடாது. ஜெபங் கேட்கிற தேவனுக்கு எல்லாமே தெரிந்திருக்கிறது.

அதேபோல உபவாசம் செய்வது என்பதும் சாதாரணமான தொன் றில்லை. கண்டதற்கும் உபவாசம் செய்யும்படி வேதம் எங்குமே எதிர் பார்க்கவில்லை. நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் குறைபாடு இருந்தால் அதைத் தீர்த்துக்கொள்ளவோ அல்லது நம்மை சோதிக்கும் குறிப்பிட்ட பாவத்தை நிறுத்திக்கொள்ளுவதற்காக சரீரத்தை பலவீனப் படுத்தி நம் கட்டுக்குள் கொண்டுவரவோ அல்லது சபையில் அதிகாரி களை தேவ பயத்தோடு கர்த்தரின் பணிக்காக நியமிப்பதற்காகவோ தான் உபவாசம் செய்யும்படி கர்த்தர் சொல்லியிருக்கிறார். தொட்டதற் கும் நாம் உபவாசம் எடுக்க வேண்டுமென்றோ அல்லது மற்றவர்களை அதைச் செய்யவைக்கவோ வேதம் இடம் தரவில்லை. கூட்டம் கூடி உபவாச ஜெபம் செய்வதால் எழுப்புதலை உண்டாக்கலாம் என்று வேதம் போதிக்கவில்லை. வேதம் போதிக்காத காரியங்களுக்கு நாம் உபவாச ஜெபத்தில் ஈடுபடக்கூடாது.

ஜெபத்தைப் பற்றியும், உபவாசத்தைப் பற்றியும் மேலே நாம் பார்த்த உண்மைகளை வேதம் போதிக்க இன்றைக்கு இவை தவறான முறையில் தமிழினத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. உபவாச ஜெபம் என்று எடுத்ததற்கெல்லாம் சபைகளில் ஜெபக்கூட்டம் நடந்து வருகிறது. பாரம் பரிய சபைகளில் இது ஒரு சடங்காக இருந்து வருகிறது. முக்கியமாக லெந்து நாட்களில் இது மிகவும் அதிகம். ஜீவனே இல்லாமல், இரட்சிப் பின் அருமையையே வாழ்க்கையில் அறிந்திராமல், வெறும் பெயர்க் கிறிஸ்தவனாக இருந்து உபவாசம் ஜெபத்தை ஒரு சடங்குபோல் செய்வ தால் ஒன்றும் நடந்துவிடப்போவதில்லை.

சபைத் தொடர்பில்லாமல் தனி ஊழியம் செய்து வருகின்ற மனிதர் கள் எல்லாம் பல (பெந்தகொஸ்தே) சபைகளைக் கூட்டி பல நாட்க ளுக்கு ஜெபக்கூட்டங்களை நடத்தி வருகிறார்கள். 15 நாட்கள், 30 நாட்கள் என்று இரவு ஜெபக்கூட்டங்களை நடத்தி வருகிறார்கள். இதெல்லாம் கேட்பதற்கு நன்றாய்த்தான் இருக்கிறது. தமிழினத்தில் ஏதோ எழுப்புதல் நடக்கிறது என்றுகூட எவரும் எண்ணி விடலாம். ஆனால், இங்கே நடக்கின்ற விஷயமே வேறு. வியாதிகளைத் தீர்க்கி றோம், ஜெபிக்கிறோம் என்று சொல்லி ஊரில் உள்ள, முக்கியமாக உணர்ச்சி வசப்படும் பெண்களைக்கூட்டி இப்படிக் கூட்டத்தை நடத்தி விடுகிறார்கள். வியாதிகளைத் தீர்ப்பதற்கு இயேசுவோ, அப்போஸ்தலர் களோ ஜெபக்கூட்டம் நடத்தியதாக வரலாறு இல்லை. சத்தியத்துக்கு வாழ்க்கையில் இடங்கொடுக்காதவர்கள் சடங்காக ஜெபக்கூட்டம் நடத்தினால் கர்த்தர் அசைந்துவிட மாட்டார்.

இந்த இரவு அல்லது முழு நேர உபவாச ஜெபக்கூட்டங்களில் நடக்கின்ற இன்னுமொரு அநியாயம் கூட்டம் நடத்துகிறவர்கள் பல தடவைகள் காணிக்கை எடுப்பதுதான். இந்த ஊழியத்திற்கு, அந்த ஊழியத்திற்கு என்று கூறி பணத்தில் இருந்து நகைநட்டு அத்தனையையும் கூட்டத்துக்கு வருகிறவர்களிடம் இருந்து காணிக்கையாக வற்புறுத்தி வாங்கி விடுகிறார்கள். காணிக்கை எடுக்கும் நேரம் வருகிறபோது அதற்காக ஸ்பெஷலாக தயார் செய்யப்பட்ட ஒரு நபர் தன்னுடைய திறமையைக் காட்டி உணர்ச்சிவசமாகப் பேசி ஆத்துமாக்கள் கழுத்தில் இருந்ததைக் கூட, அது தாலி என்ற உணர்வுகூட இல்லாமல் கழட்டிக் கொடுத்துவிட வைத்துவிடுகிறார். இதையெல்லாம் இயேசு செய்ததாக நாம் வேதத்தில் வாசிப்பதில்லை. இதெல்லாம் இயேசு பெயரில் தமிழினத்தில் கிறிஸ்தவக் கூட்டங்களில் நடந்து வருகின்ற அநியாயங்கள்.

மேலே நாம் பார்த்ததெல்லாம் ஆத்மீகக் கூட்டங்கள் என்ற பெயரில் சடங்குபோல் நடந்து வருகின்றன. யாருக்கும் கட்டுப்படாமல் தனி (வியாபார) ஊழியம் நடத்தி வருகின்ற அத்தனை பேரும் இத்தகைய உபவாசக்கூட்டங்களை நடத்தாமல் இருப்பதில்லை. கூட்டங்களில் எண்ணிக்கை அதிகரிக்க அவர்களின் வங்கிக் கணக்குத் தொகையும் அதிகரிக்கின்றது. இதையெல்லாம் எவரும் எதிர்ப்பதோ, குறை கூறுவதோ கிடையாது. கர்த்தர் பெயரில் நடப்பதால் இதில் தவறிருக்காது என்று எண்ணி அறிவில்லாமல் நடந்துகொள்கிறவர்கள் எண்ணிக்கையே அதிகம். கர்த்தர் நமக்குத் தந்துள்ள கிருபையின் சாதனமான ஜெபம் சில மனிதர்கள் அவருடைய பெயரைப் பயன்படுத்தி பணம் பண்ணுவதற்கு இந்தவிதத்தில் நம்மினத்தில் இன்று உதவி வருகின்றது. ஏமாறுகிறவர்கள் இருக்கிறவரை ஏமாற்றுகிற எத்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டுதான் போகும்.

## கிறிஸ்துவும் பாரம்பரியமும்

இயேசு கிறிஸ்து லூக்கா 12ம் அதிகாரத்தில் பாரம்பரியத்தின் சட்டையை உரித்துக் காட்டுகிறார். அப்பகுதியில் அவர் சீடர்களைப் பார்த்து, “நீங்கள் மாயமாகிய பரிசேயருடைய புளிதமாகுதலைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்” என்கிறார். பரிசேயர்களுடைய மாயமான புளிதமாகுதல் எது? இப்பகுதியில் 2, 3 ஆகிய வசனங்கள் அதை விளக்குகின்றன. பரிசேயர்கள் உள்ளே கேடான இருதயத்தைக் கொண்டிருந்து வெளிப்புறத்தில் நல்ல பக்திமான்கள் போல் பல்வேறு சடங்குகளையும் செய்து வந்தார்கள். அவர்கள் செய்கின்ற அத்தனையும் ஒரு காலத்தில் வெளிப்படுத்தப்படும் என்று இயேசு எச்சரிக்கை செய்தார். வேத பாதுகாவலர்கள் போலவும், கர்த்தருக்கு பக்கத்தில் இருப்பவர்கள் போலவும் யூதர்கள் முன் நடந்து வந்த பரிசேயர்களை இயேசு விரியன் பாம்புக்குட்டிகள் என்று அழைத்தார். ஏன்? பிணத்திற்கு வெள்ளை உடுத்தி வைத்தது போல அவர்களுடைய வாழ்க்கை இருந்ததுதான் அதற்குக் காரணம். வெளிப்புறம் ஆத்மீகத்தில் சிறந்தவர்கள் போல

அவர்கள் பல சடங்குகளைத் தவறாது செய்து வந்தாலும், பக்திக்கு ஆதாரமான மனந்திரும்புதலும், இரட்சிப்பும் இல்லாதவர்களாக இருந் தார்கள். சடங்குகளும், பாரம்பரியமுமே அவர்களுக்கு பரலோக வாழ்க்கையாகத் தெரிந்தது. சடங்குகளாகிய வலையில் அகப்பட்டு அதுவே தஞ்சம் என்று வாழ்ந்தார்கள் பரிசேயர்கள். யூதர்களையும் தங்களைப் போலவே வாழத்தூண்டி வந்தார்கள்.

இயேசு கிறிஸ்து பரிசேயர்களின் பாரம்பரியத்தையும், சடங்குகளை யும் சாடினார். மத்தேயு 5-7 வரையுள்ள மலைப் பிரசங்கத்தில் இயேசு பரிசேயர்களுடையதும், யூத மதத்தலைவர்களுடையதும் போலிப் பாரம் பரிய வாழ்க்கையை இனங்காட்டி அவர்களை, “மாயக்காரர்கள்”, “அஞ் ஞானிகள்”, “விரியன் பாம்புக்குட்டிகள்” என்று அழைத்தார். அவர் களைப்போல இருக்காதீர்கள் என்று மக்களை எச்சரித்தார். இயேசு கிறிஸ்துவின் மலைப் பிரசங்கம் முழுவதுமே சடங்குகளும், சம்பிரதாயங் களும் நிறைந்து பாரம்பரியமாக இருந்துவந்த சமய மார்க்கத்தை இனங்காட்டிக் கண்டிக்கிறது. குறிப்பாக மத்தேயு 15:1-9 வரையுள்ள வசனங்களில் பாரம்பரியத்துக்கு ஆதரவாக வேதபாரகர்களும், பரிசேயர்களும் பேசியபொழுது, இயேசு கிறிஸ்து அவர்களைப் பார்த்து பாரம்பரியத்தைப் பெரிதுபடுத்தி நீங்கள் தேவனுடைய கற்பனைகளை (பத்துக் கட்டளைகள்) மீறி நடக்கிறீர்கள் என்று குற்றஞ் சாட்டினார். “உங்கள் பாரம்பரியத்தினால் தேவனுடைய கற்பனையை அவலமாக்கு கிறீர்கள்” என்று கொதித்தார். “மனுஷருடைய கற்பனைகளை உபதேசங் களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான்” என்று ஏசாயா காலத்திலும் மக்கள் கர்த்தரை நிராகரித்து பாரம்பரியத்துக்குப் பணி செய்து வந்ததை சுட்டிக்காட்டி எச்சரித்தார் (மாற்கு 7). இன்று அதே போல கிறிஸ்தவம் என்ற பெயரில் சபைகள் தோறும், வீடுகள் தோறும் இருந்து வரும் போலிச் சம்பிரதாயங்களும், பாரம்பரியமும் இயேசு கிறிஸ்துவோடு சம்பந்தமில்லாத அஞ்ஞானிகளின் மார்க்கமே.

## அப்போஸ்தலர்களும் பாரம்பரியமும்

ஆதி சபை அப்போஸ்தலர்களும் பாரம்பரியத்திற்கும், சம்பிரதாய, சடங்குகளுக்கும் இடம் கொடுக்கவில்லை. மெய்க்கிறீஸ்தவத்தை அவை அழித்துவிடும் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது. பரிசுத்த ஆவியைப் பணங்கொடுத்துவாங்கி சடங்குபோல் பயன்படுத்த எண்ணிய சீமோனைப் பேதுரு கடுமையாக் கண்டித்தார் (அப். ). பழைய ஏற்பாட்டு சடங்குகளையும், பாரம்பரியத்தையும் தொடர்ந்தும் கடைப் பிடிக்க முயற்சி செய்தவர்களுக்கு முடிவு கட்ட எருசலேம் கவுன்சில் அப்போஸ்தலர்களாலும், திருச்சபை மூப்பர்களாலும் கூட்டப்பட்டது (அப். 15). பாரம்பரியத்தையும், சடங்கையும் வைத்து கிறிஸ்தவத்திற்கு மாசேற்படுத்த முயன்றவர்களை பவுல் ரோமர், கலாத்தியர், கொலோ செயர் ஆகிய நிருபங்களில் கடுமையாக சாடுகிறார். எபிரேயருக்கு

எழுதப்பட்ட நிருபத்திலும் அதையே பார்க்கிறோம். உதாரணத்திற்கு பவுல் கொலோசேயர் 2:8 கூறுவதைக் கவனியுங்கள், "லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாக இருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல". போலிப் பாரம் பரியங்களுக்கு அப்போஸ்தலர்களின் அகராதியில் இடமிருக்கவில்லை.

## பாரம்பரியமா? இரட்சிப்பின் அனுபவமா?

சீர்திருத்தவாதிகளும், பியூரிட்டன்களும் மனிதன் ஏற்படுத்தி வைக்கும் போலிப் பாராம்பரியங்களுக்கு எதிராகப் போராடி மெய்க் கிறிஸ் தவத்தை நிலைநாட்டிய போதும், நாளடைவில் வரலாற்றில் மறுபடியும் பிசாசு போலிப் பாரம்பரியங்களுக்கு மனிதனை தலைசாய வைத்தான். மனிதன் ஆதமீக விருத்தியற்று வாழ பிசாசு பயன்படுத்தும் சாதனங் களே சடங்குகளும், சம்பிரதாயங்களும், போலிப் பாரம்பரியங்களும்.

சடங்குகளுக்கும், சம்பிரதாயங்களுக்கும், பாரம்பரியத்துக்கும் அடிமைப்பட்டிருக்கிறவர்களே! இன்று உங்களுக்கு எது தேவை? இயேசு சொல்லுகிறார், மனந்திரும்புதலும், இரட்சிப்பின் அனுபவமும் இல்லாத வன் பரலோகம் போவதில்லை என்று. பாரம்பரியத்தையும், சடங்கு களையும் வைத்துக்கொண்டு ஒருவரும் பரலோகம் போக முடியாது. நீங்கள் மரிக்கின்றபோது எல்லாச் சடங்குகளுக்கும் உங்களோடு சேர்த்து சங்கூதப்பட்டுவிடும். மெய்யான மனந்திரும்புதலும், இரட்சிப்பின் அனுபவமும் இருக்கின்ற உள்ளத்தில் சடங்குகளுக்கும், சம்பிரதாயத்துக் கும் இடமிருக்காது. ஒருவருடைய வாழ்க்கையில் இயெசு கிறிஸ்து மெய்யாகக் குடிபுகுந்துவிட்டால் சடங்குகளுக்கும், பாரம்பரியத்துக்கும் அவருடைய வாழ்க்கையில் அன்றோடு சமாதி கட்டப்பட்டுவிடும். தொடர்ந்து சடங்கை நம்பி வாழ்கிறவன் கிறிஸ்துவுக்குப் பிள்ளையல்ல; நரகத்தில் பற்கள் கடிபட அக்கினியில் வேகப் போகிறவன்.

இந்துப் பண்பாட்டிலும், பாரம்பரியத்திலும், சடங்குகளிலும் இருந்து நமக்கு விடுதலை தர இயேசு இந்த உலகத்துக்கு வந்தார்; கல்வாரி யில் மரித்தார்; உயிர்த்தெழுந்தார். அவரை ஆண்டவராக விசுவாசித்து நேசிக்கிறவர்கள் அவர் மரித்த பாவப்பாரம்பரியத்தையும், சடங்குகளை யும் தொடர்ந்து பின்பற்றுவார்களா? இயேசு குழிதோண்டிப் புதைத்த கோரப் பாரம்பரியத்தைக் கொண்டாடி மகிழ்வார்களா? பாரம்பரியத் துக்கும், சடங்குகளுக்கும் படையல் நடைபெறும் இடத்திலெல்லாம் பிசாசு ஆளுகிறான் என்பதை நீங்கள் உணரவில்லையா? சமபிரதாயங் களைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கிறிஸ்து தரும் இரட்சிப்பை இழந்து விடாதீர்கள். பரிசுத்த வாழ்க்கை வாழ பாரம்பரியம் ஒருநாளும் உதவ முடியாது. திருச்சபை பக்தியில் உயர பாரம்பரியம் ஏணியாக முடியாது. பாரம்பரியம் பக்திக்கு விரோதி; எதிரி.

# இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு - Order of Salvation

வேதவத இறையியல் போதனைகளில் பரிச்சயமில்லாதவர்களுக்கு இது என்ன, இதுவரை கேள்விப்படாததொன்றாக இருக்கிறதே? என்ற சிந்தனை எழும். தமிழ் கிறிஸ்தவர்களின் ஆத்மீக வளர்ச்சிக்கு அவசியமான, திருச்சபைகளிலும், இறையியல் கல்லூரிகளிலும் இன்று கேட்க முடியாததாக இருக்கின்ற சத்தான இறையியல் போதனைகளை எளிதான மொழியில் எல்லோரும் விளங்கிக் கொள்ளும் வகையில் தருவது நமது பத்திரிகையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று. அந்த அடிப்படையில் "இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு" பற்றி இந்த இதழில் முதல் தொடராக விளக்க முனைகிறேன்.

இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கை ஆங்கிலத்தில் Order of Salvation என்று அழைப்பார்கள். இதை இலத்தீனில் Ordo Salutis என்று அழைப்பார்கள். இரட்சிப்பில் படிமுறையாக ஒரு ஒழுங்கிருக்கிறதா? என்று எவராது கேள்வி எழுப்பலாம். ஆம்! அப்படி ஒரு ஒழுங்கை நாம் வேதத்தைக் கவனமாகப் படிக்கும்போது காணமுடிகிறது. அது என்ன? என்பது அடுத்த கேள்வியாக இருக்கும். நம்முடைய பாவத்திலிருந்து நம்மை விடுவித்து இரட்சிப்பை இலவசமாக நமக்கு வழங்கும் கர்த்தர் அந்தச் செயலை நம்மில் எப்படி ஆரம்பித்து நடத்தி இறுதியில் நம்மைப் பரலோகத்தில் கொண்டு சேர்க்கிறார் என்பது பற்றிய தெளிவான படிமுறையான விளக்கத்தையே "இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு" என்ற பதங்களின் மூலம் குறிப்பிடுகிறோம்.

இரட்சிப்பின் இந்தப் படிமுறையான ஒழுங்கை குறிப்பிட்டுக் காட்டுகின்ற முக்கிய வசனம் ரோமர் **8:29–30** ஆகிய வசனங்கள். இந்த வசனங்களில் அப்போஸ்தலன் பவுல், தேவன் மனிதகுலத்தில் தாம் முன்குறித்துள்ள மக்களை எந்தவிதமாக கிறிஸ்துவுக்குள் இரட்சித்து இறுதியில் மகிமைப்படுத்துகிறார் என்பதை சுருக்கமாக விளக்குகிறார். அப்படி விளக்கும்போது, கர்த்தரின் கிருபையின் கிரியையில் ஒரு ஒழுங்கை நாம் பார்க்க முடிகின்றது. தேவன் தாம் முன்குறித்த மக்களை முதலில் அழைக்கிறார் (Call); அப்படி அழைக்கப்பட்டவர்கள் அவரால் நீதிமான்களாக அறிக்கையிடப்படுகிறார்கள் (Justified); இறுதியில் அவர்களை அவர் மகிமைப்படுத்துகிறார் (Glorified) என்று பவுல் விளக்குவதைக் கவனிக்கிறோம். இந்தப் படிமுறை விளக்கம் சுருக்கமானதே. இந்த வசனங்கள் படிமுறையாக மூன்று முக்கிய கிருபைகளை மட்டும் குறிப்பிடுகின்றது - அழைப்பு, நீதிமானாக்குதல், மகிமைப்படுத்துதல். இதில் குறிப்பிடப்படாத வேறு சில முக்கிய கிருபைகளும்

இருக்கின்றன. இந்தப் பகுதியில் அவை குறிப்பிடப்படாவிட்டாலும் அவற்றைப் பற்றி புதிய ஏற்பாட்டின் ஏனைய பகுதிகள் விளக்குகின்றன. அதாவது, கர்த்தர் தாம் முன்குறித்து தெரிந்துகொண்டிருக்கிற மக்களுக்கு நித்திய ஜீவனை அளிக்கும் கிரியை முதலில் அழைப்பாகிய கிருபையில் ஆரம்பித்து மறுபிறப்பு, நீதிமானாக்குதல், மகவேட்பு, பரிசுத்தமாக்குதல், மகிமையடைதல் ஆகிய கிருபைகளை உள்ளடக்கியதாக அமைந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்கிறோம். சீர்திருத்த இறையியல் வல்லுனரான ஜோன் மரே (John Murray) இதைக்குறித்து பின்வருமாறு விளக்குகிறார், "இரட்சிப்பின் அனுபவம் நம்மில் நிகழ்ந்து விடுகிற சாதாரணமான ஒரு தனி நிகழ்வு மட்டுமே என்று நாம் எண்ணி விடக்கூடாது. அதில் படிமுறையாக பல நிகழ்வுகள் உள்ளடங்கியிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் தனித்துவமானவை. ஒன்றின் அடிப்படையில் இன்னொன்றை நாம் விளக்க முடியாது. ஒவ்வொன்றும் கர்த்தருடைய மீட்பின் கிரியையில் தனித்தனியான அர்த்தத்தையும், திட்டத்தையும் கொண்டு விளங்குகின்றன" என்கிறார்.

மேலே நாம் பார்த்த இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கை மேலும் விரிவாக ஆராய முடியும். அப்படி அதை விரிவாகப் படிக்கும்போது அது மேலும் சில கிருபைகளையும் தனக்குள் உள்ளடக்கியிருப்பதைக் காணலாம். அதாவது, அழைப்பு, மறுபிறப்பு, மனமாற்றம், விசுவாசம், மனந்திரும்புதல், நீதிமானாக்குதல், மகவேற்பு, பரிசுத்தமாக்குதல், விடாமுயற்சி, மகிமையடைதல் ஆகியவையே அவை. இனி வரப் போகின்ற இதழ்களில் இவை ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆராய்வதோடு, படிமுறை ஒழுங்கில் எது எதற்குப் பிறகு வரவேண்டும் என்பதையும், அந்த ஒழுங்கில் ஒன்றிற்கு மற்றொன்றோடு இருக்கின்ற தொடர்பையும் விளக்கமாக ஆராயப் போகிறோம்.

## தத்துவ ரீதியில் விளங்கிக்கொள்ள வேண்டிய படிமுறை ஒழுங்கு

இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கில் காணப்படும் கிருபைகள் ஒவ்வொன்றும் ஒன்றிற்குப் பின் இன்னொன்றாக கால இடைவெளியைக் கொண்டு நம்மில் நிகழ்வதாக நாம் தப்பாக எண்ணிவிடக்கூடாது. இவற்றைப் படிமுறையாக தத்துவ ரீதியில் (Logical order) மட்டுமே புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, இவை ஒவ்வொன்றிற்கும் இடையில் கால இடைவெளி இருப்பதாக எண்ணிவிடாமல் இந்த ஒழுங்குவரிசையில் தத்துவ ரீதியில் எது முதலில் வர வேண்டும், அதற்கடுத்ததாக எது வரவேண்டும் என்று ஆராய்வது அவசியம். சீர்திருத்த இறையியல் வல்லுனர்கள் இந்தப் படிமுறை ஒழுங்கை கால இடைவெளியை மனதில் கொண்டு விளக்கவில்லை. மாறாக, அவர்கள் இரட்சிப்பாகிய கிருபை கர்த்தரின் ஞானத்தினதும், கிரியையினதும் அடிப்படையில் எந்தெந்தக் கிருபைகளை வரிசைக்கிரமமாக உள்ளடக்கியிருக்கிறது என்பதை தத்துவரீதியில் முறைப்படி விளக்குவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். உதாரணமாக, முதலாவ

தாக, கர்த்தர் தாம் தெரிந்துகொண்ட மக்களை அழைக்கிறார் என்று பார்த்தோம். இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கில் இதுவே முதலாவதாக அமைந்திருக்கின்றது. மறுபிறப்பு இதற்கு அடுத்தபடியாகத்தான் இந்த ஒழுங்குமுறையில் இருக்க வேண்டும். ஏனென்றால், அழைக்கப்பட்டவர்களே பரிசுத்த ஆவியின் மூலம் மறுபிறப்பை அடைகிறார்கள். தத்துவ ரீதியில் இந்த ஒழுங்குமுறையில் மறுபிறப்பு முதலாவதாக வர முடியாது. அதேபோல், நீதிமானாக்குதலுக்கு முன்னால் பரிசுத்தமாக்குதல் வர முடியாது. விசுவாசத்தின் மூலம் நீதிமானாகியவனே பரிசுத்தமாக்குதலாகிய கிருபையைத் தன் வாழ்க்கையில் அனுபவிக்கிறான். மணி அடித்த பிறகே கல்லூரி முடிகிறது. அதுவே ஒழுங்கு. அந்த ஒழுங்கை நாம் மாற்றி விளக்குவதில்லை. கார் எஞ்சினை சாவியால் ஆரம்பத்தில் திருப்புகிறபோதே எஞ்சின் ஓட ஆரம்பிக்கிறது. அதைப்போலத்தான் இதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

## இரட்சிப்பின் நிகழ்வில் கால இடைவெளி

கர்த்தர் நம்மை இரட்சிக்கும் விதத்தைக் கால இடைவெளியின் அடிப்படையில் விளக்குவதானால், அது கர்த்தர் நம்மில் வினாடிப் பொழுதில் (Momentary) செய்யும் கிரியை என்றே கூற முடியும். இரட்சிப்பை நாம் படிப்படியாகக் கர்த்தரிடம் இருந்து பெற்றுக் கொள்வதில்லை. அதை நாம் முழுமையாகத்தான் அடைகிறோம். கொஞ்சம் கொஞ்சமாக தண்ணீர் ஊற்றுவதைப் போலவோ அல்லது வித்து செடியாகிப் பின்னால் மரமாவதைப் போலவோ படிப்படியாக மறுபிறப்பு நம்மில் நிகழ்வதில்லை. கொடுக்கும் மறுபிறப்பைக் கர்த்தர் மொத்தமாக பரிசுத்த ஆவியின் கிரியையின் மூலம் நம்மில் ஒரே நேரத்தில் நிகழ்த்துகிறார். அப்படி நிகழ்ந்த மறுபிறப்பின் அனுபவத்தை நாம் முழுமையாக உணர்வதற்கு சில காலம் எடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. மறுபிறப்பாகிய ஆவியின் கிரியை நம்மில் நிகழ்ந்து விசுவாசத்தை நாம் அடைகிறபோது அது நிகழ்ந்த வினாடியே அல்லது அந்த நேரத்திலேயே இரட்சிப்பின் நிச்சயம் எல்லோருக்கும் ஏற்பட்டு விடுவதில்லை. பெரும்பாலானோர் ஒரு குறுகிய காலத்துக்குப் பின்பே கிறிஸ்து இயேசுவை நிச்சயமாக நாம் விசுவாசிக்கிறோம் என்ற நம்பிக்கையுடன் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள சபையை நாடுகிறார்கள். இரட்சிப்பின் கிரியை நம்மில் ஆவியில் சடுதியாக நிகழ்ந்தபோதும் அதை முழுமனதோடு அனுபவரீதியில் மனந்திரும்புகிறவர்கள் உணர்வதற்கு நேரம் எடுக்கிறது. நம் சரீரத்தில் அடி விழுந்தால் அடி உடனடியாக விழுந்திருந்தாலும் அதன் வலியை முழுமையாக அதே நிமிடம் நாம் உணர்வதில்லை. ஆ! என்று உடனே அலறினாலும் நேரம் போகப் போகத்தான் வலியின் உக்கிரத்தை உணர ஆரம்பிக்கிறோம். அதைப் போக்கிக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறோம். அதுபோலத்தான் இரட்சிப்பின் அனுபவமும்.

வரலாற்றில் சீர்திருத்த இறையியல் வல்லுனர்கள் கர்த்தரின் இரட்சிப்

*பின் கிரியையை இந்த முறையில் முறைப்படுத்தி ஆராய்ந்து விளக்கி யிருக்கிறார்கள். இவ்வாறு முறைப்படுத்தி விளக்கும்போது இரட்சிப்பின் மெய்த்தன்மையை நாம் தெளிவாக விளங்கிக்கொள்ள முடிகிறது. சீர்திருத்த இறையியல் வல்லுனர்கள் இந்த விளக்கத்தை வேதத்தை ஆராய்ந்து அதிலிருந்தே பெற்றுக்கொண்டார்கள்.*

## இந்தப் போதனையை அறிந்திருக்க வேண்டிய அவசியமென்ன?

*(1) இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கை நாம் அறிந்து கொள்ள வேண்டியதன் அவசியம் என்ன? என்ற கேள்வி எழலாம். கர்த்தர் இரட்சிக்கிறார் என்பதோடு நிறுத்திக்கொள்ளக் கூடாதா? அதற்கு மேலே போய் இப்படி விரபமாக ஒரு ஆராய்ச்சி தேவையா? என்று வேதத்தை ஆழமாகப் படிப்பதையே பலர் விலக்கி வைத்திருக்கிறார்கள். இந்தத் தவறான அனுகுமுறையால்தான் தமிழ் கிறிஸ்தவம் வேத அறிவில்லாது தள்ளாடிக் கொண்டிருக்கிறது. இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு மனிதனின் சிந்தனையில் உதித்த செயற்கையான போதனை யல்ல. அது வேதம் விளக்கும் இரட்சிப்பு பற்றிய தெளிவான போதனை. வேதம் விளக்குகின்ற எதையும் நாம் விபரமாக அறிந்து வைத்திருப்பது அவசியம். இறையியல் போதனைகளை அறிந்து வைத்திருக்காமல் இரட்சிப்பின் அருமையை ஒருவன் உணரமுடியாது; கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர முடியாது; கர்த்தரை மகிமைப்படுத்த முடியாது.*

*(2) நாம் வாழும் கால கட்டத்தில் சுவிசேஷம் சுவிசேஷமாகப் பிரசங்கிக்கப்படுவதில்லை என்பது சொல்லித் தெரியவேண்டிய அவசியமில்லை. “இயேசுவை ஏற்றுக்கொள், ஞானஸ்நானம் எடு” என்று இலவசமாக படியரிசி அளப்பதுபோல் இயேசு கிறிஸ்துவை அறிமுகம் செய்து வைத்து இரட்சிப்பின் அனுபவத்தை வாழ்க்கையில் அறியாத ஒரு கூட்டத்தை இன்றைய நவீன சுவிசேஷகர்கள் உருவாக்கி விட்டிருக் கிறார்கள். அத்தோடு, பரிசுத்த ஆவியானவரின் கிரியையை மகிமைப் படுத்துகிறோமென்று மெய்யான சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதையே கைவிட்டுவிட்டிருக்கிறது பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் இயக்கம். இத்தகைய குழப்பமான தமிழ் கிறிஸ்தவ உலகில் இரட்சிப்பு என்றால் என்ன? அதை எந்தவிதமாக கர்த்தர் தன்னுடைய மக்களுக்கு அளிக் கிறார்? இரட்சிப்பைப் பெற்று அதை எவ்விதமாக விசுவாசிகள் தங்கள் வாழ்க்கையில் உணர்ந்து, பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து இரட்சிப்பின் நிச்சயத்தை அடைகிறார்கள்? என்பதுபோன்ற கேள்விகளுக் கெல்லாம் தகுந்த விடையளிக்கிறது இரட்சிப்பின் படிமுறை ஒழுங்காகிய இறை யியல் போதனை. இந்த சத்தியத்தைத் தெளிவாக அறிந்து கொள்வதால் கர்த்தரின் கிருபையின் மேன்மையையும், நமது விசுவாச வாழ்க்கையின் மேன்மையையும் நாம் நன்றாக உணர முடியும். அத்தோடு, போதனை செய்கிறவர்கள் அறிவுபூர்வமாக சுவிசேஷத்தைச் சொல்லி ஆத்துமாக் களின் ஆத்மீக வாழ்க்கைக்கு சரியான வழிகாட்ட முடியும். இரட்சிப் பாகிய கிருபையின் மெய்த் தன்மையையே அறிந்திராதவர்கள் எப்படி*

*கர்த்தர் மகிமையடையும்படி சுவிசேஷம் சொல்ல முடியும்? ஆத்துமாக் களுக்கு நல்வழி காட்ட முடியும்?*

*(3) அடுத்ததாக, இரட்சிப்பாகிய கிருபை பற்றிய தவறான போதனைகளுக்கு நம்வாழ்க்கையில் இடம்கொடுப்பதை நாம் தவிர்த்துக் கொள்ளலாம். தமிழ் கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் கர்த்தரின் மீட்பின் கிரியைகள் பற்றிய போதனைகளை தெளிவாக அறிந்து வைத்திருக்கவில்லை. அதனால், இரட்சிப்பு பற்றிய போலிப் போதனைகள் நம் மத்தியில் நிரம்பி வழிகின்றன. நீதிமானாக்குதல் பற்றியும் பரிசுத்தமாக்குதல் பற்றியும் தொடர்ந்தும் தவறான போதனை கள் சபைகள்தோறும், கிறிஸ்தவ குழுக்கள் தோறும் ஆண்டு வருகின்றன. நீதிமானாக்குதல் பற்றிய ரோமன் கத்தோலிக்க மதத்தின் போலிப் போதனைகளை தமிழ் கிறிஸ்தவம் வரவேற்று தாலாட்டுப் பாடிக் கொண்டிருக்கிறது. அது தவறான போதனை என்ற உணர்வே இல்லா மல் அநேகர் அவற்றைத் தொடர்ந்து பின்பற்றிக் கொண்டிருக்கிறார் கள். வேதத்தின் பரிசுத்தமாக்குதலாகிய போதனையை பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் இயக்கங்கள் குழப்பி வைத்திருக்கின்றன. இரட்சிப்பு பற்றிய தெளிவான வேத அறிவில்லாமல் கர்த்தர் மகிமையடையும்படி ஒருவனால் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்? போலிப் போதனை களில் இருந்து நம்மைக் காத்துக் கொள்ளவும், கர்த்தர் தந்திருக்கும் இரட்சிப்பை அறிவுபூர்வமாகவும், அனுபவபூர்வமாகவும் அறிந்திருக்க வும் இரட்சிப்பு பற்றிய தெளிவான வேத அறிவு நமக்கு அவசியம்.*

*(4) போதக ஊழியத்தை போதகர்கள் வேத அடிப்படையில் செய்வதற்கு இந்தப் போதனை உதவும். சுவிசேஷத்தைக் கேட்டு மனந் திரும்பி ஞானஸ்நானம் கேட்டு வருகிறவர்களை ஆராய்ந்து அவர் கள் மெய்யாக இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்களா என்று அறிந்துகொள்ளவும், விசுவாசிகளாக இருந்து இரட்சிப்பின் நிச்ச யம் இல்லாமல் தவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு வழிகாட்டி இரட் சிப்பின் நிச்சயத்தை அவர்கள் அடைந்து களிகூறவும், புதிதாக கிறிஸ் துவை விசுவாசித்திருப்பவர்களுக்கு இரட்சிப்பின் மேன்மையையும் அதன் பல்வேறு அங்கங்களாகிய கிருபைகளையும் விளக்கிப் போதித்து அறிவுபூர்வமாக அவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்ற வழிகாட்டவும் போதக ஊழியத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இந்தப் போதனை உதவும். வீடு கட்டத் தெரியாத எஞ்ஜினியரை வைத்து ஒருவரும் வீடு கட்ட முயல்வதில்லை. ஆனால், ஆத்துமாக்களை விசுவாசிகளா என்று ஆராய்ந்து அறியும் பக்குவமில்லாத, அவர்களை பரிசுத்த வாழ்க்கையில் அறிவுபூர்வமாகவும், அனுபவபூர்வமாகவும் நடத்திச் செல்லத் தெரியாத நூற்றுக்கணக்கான போதகர்களை மட்டும் நம்மினம் வளர்த்து விட்டிருக்கிறது. இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு பற்றிய வேதபோதனை மெய்ப்போதகர்கள் தங்களுடைய போதகப் பணியை தேவபயத்துடன் கர்த்தரின் மகிமைக்காக நடத்திச் செல்ல உதவும். (மேலும் வரும்)*

# கிறிஸ்துவின் வழியில் திருச்சபை ஊழியம் - 2

கர்த்தருடைய வேதபோதனைகளின் அடிப்படையில் திருச் சபைகள் இந்த உலகத்தில் எவ்வாறு அமைய வேண்டும் என்று இந்த வருடத்தின் இரண்டாம் இதழில் ஆராய ஆரம்பித்தோம். அந்த ஆரம்ப ஆக்கத்தில் முதலாவதாக நாம் கவனிக்க வேண்டிய முக்கிய உண்மையாக இன்று நம்மத்தியில் அப்போஸ்தலர்கள் இல்லை என்று தெளிவாக விளக்கியிருந்தேன். அப்போஸ்தலர்கள் இன்றிருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறவர்கள் தவறான எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் இன்று நம்மத்தியில் இல்லாததோடு அவர்களுடைய போதனைகள் அனைத்தும் வேதத்தில் வடிக்கப்பட்டு நமக்குத் தரப்பட்டிருக்கிறது. இன்று அப்போஸ்தலருக்குரிய அதிகாரம் கொண்டவர்கள் எவரும் இல்லை. முக்கியமாக இந்த உலகத்தில் கர்த்தருடைய விதிகளின்படி அமைக்கப்பட்டு இயங்கி வரும் திருச்சபைக்கு மட்டுமே ஆத்மீகக் காரியங்களுக்கான அதிகாரத்தைக் கர்த்தர் அளித்திருக்கிறார்.

இனி கிறிஸ்துவின் வழியில் இந்த உலகத்தில் அமைய வேண்டிய திருச்சபைப் போதனைகள் பற்றிய ஐந்து முக்கிய வேதவிதிகளை (The Principles of Mission) இந்த இதழில் இருந்து ஆராய்வோம். இந்த விதிகள் எக்காலத்துக்கும் உரியவை. எந்தவிதமான வேத போதனைகளையும் அறியாது, அறிந்திருந்தாலும் அவற்றிற்கு இடங்கொடுக்காது மனம் போன போக்கில் சுயநல நோக்கத்திற்காக வியாபார ஊழியம் நடத்தி தம்மையும் தம் குடும்பத்தையும் மட்டும் வளர்த்து வருகிறவர்கள் பெருகிக் காணப்படுகின்ற தமிழினத்தில் சிந்திக்கும் இதயத்தைக் கொண்டிருப்பவர்கள் இந்த வேத போதனைகளை ஆராய்ந்து பார்த்து தங்களைத் திருத்திக்கொண்டு கர்த்தருடைய மெய்யான திருச்சபைக்கு அடங்கி வாழ்ந்து ஆத்ம விருத்தி அடைவார்களானால் அதுவே நமக்கு பேரானந்தமளிக்கும். இனி வேதம் போதிக்கும் திருச்சபை அமைப்புக்கான ஐந்து முக்கிய வேத போதனைகளை நாம் ஆராய்வோம்.

**(1) திருச்சபையை இந்த உலகத்தில் கர்த்தர் தம்முடைய இறையாண்மையின் அடிப்படையில் அமைக்கிறார். எனவே, நம்முடைய திருச்சபை அமைப்புப் பணிகள் அனைத்தும் அவருடைய இறையாண்மையைக் கருத்தில் கொண்டு அதற்குக் கட்டுப்பட்டு அமைய வேண்டும்.**

இறையாண்மை என்பதை ஆங்கிலத்தில் Sovereignty of God என்று அழைப்பார்கள். கர்த்தர் சகல வல்லமையுமுள்ளவர்; அவருக்கு மேல்

*அதிகாரமுள்ள ஒருவரும் இல்லை என்பது இதற்கு அர்த்தம். கர்த்தர் என்ற அவருடைய பெயரிலே அந்த அர்த்தம் இருக்கிறது. ஆண்டவர் என்பதிலும் ஆளுகிறவர் என்ற அர்த்தத்தைப் பார்க்கிறோம். சகலத்தையும் படைத்த தேவன் தமது படைப்பைத் தொடர்ந்து பராமரித்து ஆண்டு வருகிறார். அவருடைய ஆளுகைக்கு உட்படாத இடம் இல்லை. இந்த உலகத்தின் இளவரசனான பிசாசு தன்னுடைய வேலைகளைத் தொடர்ந்து செய்து வந்து கொண்டிருந்தபோதும் அவனுடைய செயல்கள் கர்த்தர் விதித்திருக்கும் எல்லையை மீறி நடந்துவிட முடியாது. பிசாசின் கிரியைகளும் கர்த்தருடைய அதிகாரத்துக்கு உட்பட்டிருக்கின்றன என்று கூறலாம். இதற்காக பிசாசின் செயல்களுக்கு கர்த்தரைக் குற்றஞ்சாட்ட முடியாது. பிசாசு தன்னுடைய இயல்புக்கு ஏற்ப காரியங்களைச் செய்து வந்தபோதும் கர்த்தர் அவனையும் ஒரு எல்லைக்குள் வைத்திருக்கிறார். அதேபோலத்தான் உலகத்தில் கேடான மனிதர்களுடைய கிரியைகளும் அவருடைய கட்டுக்குள் இருக்கின்றன. கர்த்தருடைய ஆளுகை எங்கும் பரந்து வியாபித்திருக்கிறது.*

*சங்கீதம் 2 கர்த்தரின் இறையாண்மையை அருமையாக விளக்குகிறது. “ஜாதிகள் கொந்தளித்து ஜனங்கள் விருதாக்காரியத்தைச் சிந்திப்பானேன்? கர்த்தருக்கு விரோதமாகவும் அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனை பண்ணி: அவர்கள் கட்டுக்களை அறுத்து அவர்கள் கயிறுகளை நம்மைவிட்டு எறிந்துபோடுவோம் என்கிறார்கள். பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார்; ஆண்டவர் அவர்களை இகழுவார்.” என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான். இந்த வசனங்களும் இந்த சங்கீதமும் கர்த்தருடைய இறையாண்மையை விளக்குகின்றன. மனிதர்களுடைய செய்கைகளைப் பார்த்து கர்த்தர் நகைப்பதற்குக் காரணமென்ன? அவர் அவருடைய குமாரனை அபிஷேகம் பண்ணி வைத்திருக்கிறார். அதை ஒருவராலும் அசைக்க முடியாது. மனிதர்கள் மனந்திரும்பாமல் இருந்தால் குமாரனின் கோபக்கனலைத்தான் அவர்கள் சந்திக்க வேண்டும். அவர்களால் வேறு எதையும் செய்துவிட முடியாது. இறையாண்மையுள்ள கர்த்தரின் திட்டத்தை மீறி எவரும் நடந்துவிட முடியாது. இதையே தானியேல், தானியேல் **4:35**-ல் நினைவுறுத்துகிறான், “அவர் தமது சித்தத்தின்படி வானத்தின் சேனையையும், பூமியின் குடிகளையும் நடத்துகிறார்; அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி: என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை. .”*

*கர்த்தர் இறையாண்மையுள்ளவர் என்று கூறும்போது, அவர் வானம், பூமி அனைத்துக்கும் அதிபதியாய் சகல அதிகாரங்களையும் கொண்டிருந்து எவரும் அவருடைய திட்டங்களை மாற்றவோ அல்லது அவருடைய ஆலோசனைகளை தோல்வியடையச் செய்யவோ அல்லது அவருடைய சித்தத்திற்கு எதிர்த்து நிற்கவோ முடியாத நிலையில்*

*இருக்கிறார் என்கிறது வேதம் (சங்கீதம் 115:3). கர்த்தர் இறையாண்மை யுள்ளவர் என்கிறபோது, சகல நாடுகளுக்கும் அவரே அதிபதி என்று விளக்குகிறது வேதம் (சங்கீதம் 22:28). அரசாங்கங்களை அமைத்தும், பேரரசுகளைக் கவிழ்த்தும், தன் விருப்பப்படி ராஜவம்சங்களை நிர்ண யித்தும் கர்ததர் சர்வலோக நாயகனாக செயல்பட்டு வருகிறார். "அவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாக இருக்கிறார்" (1 தீமோத்தேயு 6:15).*

*கர்த்தர் இறையாண்மையுள்ளவர் என்று வேதம் போதிக்கும் ஆணித்தரமான சத்தியம் திருச்சபை அமைப்பைப் பொறுத்தவரையில் நாம் விளங்கிக்கொள்ள வேண்டிய மிக அவசியமான போதனையாகும். தாம் படைத்த அனைத்தையும் ஆண்டுவருகிற தேவனே தன்னுடைய சபையையும் ஆண்டு தன்னுடைய திட்டங்களையும், தீர்மானங்களை யும் அந்தச் சபைக்காக அதனூடாக நிறைவேற்றி வருகிறார் (எபேசியர் 1:20–23).*

## கர்த்தரின் இறையாண்மையை இகழ்ந்து நடப்பவர்கள்

*அமெரிக்காவின் சார்ள்ஸ் பினி 18ம் நூற்றாண்டில் மனிதன் தன்னுடைய சுயமுயற்சியால் இரட்சிப்பை அடைய முடியும் என்று போதித்தார். சுவிஷேசம் சொல்லுகிறவர்கள் தங்களுடைய சொந்த முயற்சியால் பாவத்தை உணர்கிறவர்களுக்கு ஊக்கம் கொடுத்து அவர்கள் நித்தய ஜீவனை அடைய வழிசெய்து விடலாம் என்று போதித்தார். இந்த மனிதனின் போதனையால் கர்த்தரின் இறை யாண்மையை விசுவாசித்து செயல்படாமல் மனித ஞானத்திலும், உலக ஞானத்திலும் நம்பிக்கை வைத்து செயல்படும் சுவிஷேகர்கள் உருவாக ஆரம்பித்தார்கள். சுவிசேஷக் கூட்டங்களில் கர்த்தரை ஏற்றுக்கொள்ளு வதற்கு கைகளைத் தூக்குவதும், தீர்மான அட்டைகளில் கையெழுத் திட்டுவிட்டதால் இரட்சிப்பு கிடைத்துவிட்டது என்று நம்புவது போன்ற வேதத்திற்குப் புறம்பான நடவடிக்கைகள் அதிகரித்தன. பினி யின் வழியில் வந்து பின்னால் பிரபலமான மனிதரே பில்லி கிரேகம். சார்ள்ஸ் பினியின் இத்தகைய நம்பிக்கைக்கும், செயல் முறைகளுக்கும் காரணம் வேத இறையியலில் விஷம் போன்ற கருத்துக்கள் நுழைய ஆரம்பித்ததே. பினியின் காலத்துக்கு முன்பே மனிதன் கர்த்தரின் துணையோடு தன்னுடைய சுயமுயற்சியால் தன்னைத் தானே இரட்சித் துக்கொள்ள முடியும் என்ற போதனையை ஜேக்கபொஸ் ஆர்மீனியஸ் ஆரம்பித்து வைத்திருந்தான். பினி ஆர்மீனியஸைப் பின்பற்றியே தன்னு டைய போதனைகளை வகுத்துக் கொண்டிருந்தான். இந்தப் போதனை களும், அதன் அடிப்படையிலான செயல்முறைகளும் கர்த்தரின் இறையாண்மையை நிராகரித்து மனிதனைக் கர்த்தரின் இடத்தில் இருத்த முயன்றன.*

*மேற்குறிப்பிட்ட போதனையைப் பின்பற்றியவர்களின் சுவிசேஷக்*

கூட்டங்களாலும், நடவடிக்கைகளினாலும் திருச்சபை பற்றிய வேத போதனைகள் நிராகரிக்கப்பட்டன. பில்லி கிரேகம் போன்ற பிரபல்ய மான தனி மனிதர்கள் ஆயிரக்கணக்கானவர்களைக் கொண்டு சுவிசே ஷக் கூட்டங்களைத் தங்களுடைய ஸ்தாபனங்களைக் கொண்டு நடத்த ஆரம்பித்தார்கள். இவர்களுக்குப் பின் சபைகள் கைகட்டி நிற்க வேண் டிய நிலையேற்பட்டது. சபைக்கு கர்த்தர் அளித்திருந்த பணிகள் சபை களுக்கு வெளியே கவர்ச்சிகரமாக பேசக்கூடிய தனிமனிதர்களுடைய அமைப்புக்களின் மூலம் நடக்க ஆரம்பித்தன. இதன் வழி வந்து இன்று உலகத்தையும், தமிழினத்தையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் அமைப்புக்களே “கூடில்லாக் குருவிகளான” கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் (Para-church organizations), கேட்பாரில்லாமல் தனி நபர்களால் சுயமாக ஆரம்பிக்கப்பட்டு நடந்து வரும் ஊழியங்களும். சபை மட்டுமே செய்ய வேண்டிய பணிகளையெல்லாம் இந்த ஸ்தாப னங்களும், நபர்களும் தங்கள் கரத்தில் எடுத்துக் கொண்டு கர்த்தரின் திருச்சபையை அலட்சியப்படுத்தி வருகின்றார்கள். அதுமட்டு மல்லாமல், சபையையே தங்கள் வாழ்க்கையில் கண்ணில் காணாதவர் களும், சபையில் இருந்து வளர்ந்து கற்றுக்கொள்ளாதவர்களும் ஊழியம் செய்கிறோம் என்றும், சபை அமைக்கிறோம் என்றும் புறப்பட்டிருக் கிறார்கள். கர்த்தரின் இறையாண்மையை அறிந்து, அவருடைய திருச்சபை பற்றிய போதனைகளுக்கு கட்டுப்பட்டு வாழ்கிறவர்கள் இப்படி உணர்ச்சிவசப்பட்டு ஊழியம் செய்ய ஓடமாட்டார்கள்.

இது தவிர தமிழினத்தில் இருந்து வரும் சபை வளர்ச்சி இயக்கத்தைப் (Church Growth Movement) பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். டொனல்ட் மெக்காவரன் (Donald McGaveren), பீட்டர் வெக்னர் (Peter Wagner) ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட இநத இயக்கம் சபை வளர்ச்சிக்கு முழுவதும் மனிதனின் ஞானத்திலும், வல்லமையிலும் தங்கியிருக்கிறது. சமுதாயத்தின் நடைமுறைகளுக்கும், பண்பாட்டிற்கும் ஒத்து, இசைந்து போய் எப்படி சபை வளர்ப்பது என்பதே இந்த இயக்கத்தின் போதனை யாக இருக்கிறது. இதன் சபை அமைப்பு வழிமுறைகளின்படி, சபை களை அமைப்பதற்கு நாம் மெய்யான சுவிசேஷப் பிரசங்கத்திலும், ஆவியின் கிரியையிலும் நம்பிக்கை வைக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, நம் சமுதாயத்தின் இந்துப் பண்பாடுகளுக்கும், சமய வழிபாட்டு முறைகளுக்கும் ஏற்றவகையில் சுவிசேஷ போதனையையும், வழிபாட்டு முறைகளையும் நாம் மாற்றி அமைத்துக் கொண்டாலே போதும், ஊழியம் வெற்றிகரமாக அமைந்து விடும் என்கிறது இந்த இயக்கம். “எங்களுடைய வழிமுறைகளைப் பின்பற்றினால் சுவிசேஷ ஊழியத்தில் கர்த்தரைக்கொண்டு அற்புதங்கள் செய்ய வைக்கலாம்” என்கிறார்கள் மெக்காவரனும், பீட்டர் வெக்னரும். கர்த்தரின் இறையாண்மையை முற்றாக நிராகரிக்கும் சபை பற்றிய போதனைகளை சபை வளர்ச்சி இயக்கம் முன்வைக்கிறது. அவை அனைத்தும் வேதபோதனைகளுக்கு முரணானவவை.

சமீபத்தில் தபாலில் எனக்கு சுவிசேஷ ஊழியம் பற்றிய ஒரு செமினாருக்கு வரும்படியாக அழைப்பு வந்திருந்தது. “இந்த செமினாரில் கர்த்தரை அறியாதவர்களுக்கு நட்புரீதியிலும், அவர்களைப் பயமுறுத் தாதவிதத்திலும் எப்படி சுவிசேஷம் சொல்லுவது என்று விளக்கப்படும்” என்று எழுதியிருந்தது. அதாவது, கர்த்தர் தெளிவான சுவிசேஷ செய்தியை நமக்குக் கொடுத்திருந்தாலும் அதை மக்களுக்கு ஏற்ற முறை யில் விளக்குவதற்கு கர்த்தருக்கு நம்முடைய உதவி தேவை என்று இவர்கள் சொல்லுவது போலிருந்தது. சுவிசேஷத்தைக் கேட்கிறவர்களை அதனால் எந்தவிதத்திலும் துக்கப்படாமலும், ஆத்திரப்படாமலும், வெறுப்படையாமலும் சந்தோஷமாகக் கேட்க வைக்கிற காரியத்தையே இன்று அநேகர் செய்து வருகிறார்கள். ஒரு பொருளைப் விலை கொடு த்து வாங்குகிறவன் அதை விரும்பி இலகுவாக பயன்படுத்தக்கூடியதாக அது இருக்க வேண்டும் (User friendly) என்ற அடிப்படையில் இன்று வர்த்தக உலகில் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. அந்த முறையை சுவிசேஷ ஊழியத்தில் பயன்படுத்தி வருகிறார்கள் இந்த நவீன சுவிசேஷ வியாபாரிகள். இதெல்லாம் கர்த்தருடைய இறையாண்மையைப் பற்றியும், அவருடைய சுவிசேஷத்தின் மகிமையைப்பற்றியும் எந்த ஞான மும் இல்லாதவர்கள் செய்கின்ற செயல்கள்.

டிஷ்பென்சேஷனலிசத்தைப் (Dispensationalism) பற்றி நமது பத்திரிகையில் ஏற்கனவே விளக்கமாக எழுதியிருக்கிறோம். இந்தப் போதனை சகோதரத்துவ சபைகளையும், பாப்திஸ்து சபைகளையும் அதிகம் பாதித்து அவர்களுடைய சபை பற்றிய நம்பிக்கைகளைப் பாதித்திருக்கிறது. இதில் நகைப்புக்கிடமான விஷயம் என்னவென்றால் இது எங்கிருந்து, எவ்வாறு பரவியது என்பதே நம்மினத்தில் அதிகமா னோருக்கு தெரியாது. இது வேதத்தில் இருப்பதாகத் தவறாக எண்ணி கிறிஸ்தவர்களில் பலரும் இதைப்பின்பற்றி வருகிறார்கள். ஜோன் டார்பி (John Darby) இங்கிலாந்தில் உருவாக்கி அமெரிக்காவில் பரப்பிய இந்தப் போதனை, நாம் வாழும் இந்தக் காலம் திருச்சபையின் காலமில்லை என்றும் இது சுவிசேஷம் சொல்லுவதற்காக மட்டும் கொடுக்கப்பட் டிருக்கிற காலம் என்றும் போதித்து திருச்சபையை அலட்சியப்படுத்து கிறது. சகோதரத்துவ சபைகளில் எல்லோருமே இதை நம்புவதில்லை என்றாலும் பெரும்பாலானவர்கள் இந்தப் போதனையினால் பாதிக்கப் பட்டு திருச்சபை அமைப்பை உதாசீனப்படுத்தி வருகிறார்கள். டிஷ்பென்சேஷனலிசம் வேதத்தில் காணமுடியாத, செயற்கையாக டார்பியினால் உருவாக்கப்பட்டு ஸ்கோபீல்டினால் (Scofield) எங்கும் பரப்பப்பட்டுள்ள ஒரு போலிப் போதனை. இந்தப் போதனையும் கர்த்தரின் இறையாண்மையை நிராகரித்து இயேசு கிறிஸ்துவின் திருச் சபையை அலட்சியப்படுத்துகிறது.

அமெரிக்காவில் செடில்பேக் (Saddleback Church) சபையின் போதக

ராக இருந்து வரும் ரிக் வொரன் (Rick Warren) திருச்சபை வளர்ச்சி பற்றி ஒரு நூல் எழுதியுள்ளார். திருச்சபை வளர்ச்சியில் அக்கறை காட்டும் ரிக் வொரன் அதற்குத் தரும் ஆலோசனைகள் மனித ஞானத்தின் அடிப்படையில் அமைந்து மனித சக்தியில் நம்பிக்கை வைத்தே அமைந்திருக்கின்றன. ஹெரல்ட் கேம்பிங் (Harold Camping) என்ற மனிதர் இன்னும் ஒருபடி மேலே போய் கர்த்தர் இன்று திருச்சபையை முற்றாக நிராகரித்துவிட்டார் என்றும் ஆத்துமாக்கள் அனைவரும் திருச்சபையை விட்டு வெளியில் வந்து வீடுகளிலும், அங்குமிங்குமாக மட்டும் கூட வேண்டும் என்று தன்னுடைய வானொலிச் செய்திகளில் சொல்லி வருகிறார். திருமுழுக்கு, திருவிருந்து, போதகர்கள், சபை அமைப்பு எதுவுமே இன்று அவசியமில்லை என்று அறிவித்து வருகிறார். இது தேவ பயமே இல்லாமல் கர்த்தரின் இறையாண்மையை நிராகரித்து எள்ளி நகையாடும் செயல்.

மனிதர்களுடைய விருப்பு, வெறுப்புகளின் அடிப்படையில் நாம் ஒருபோதும் சுவிசேஷ ஊழியத்தைச் செய்யப் புறப்படக்கூடாது. அது பெரும் தவறு. உண்மையில் மனிதனுடைய தேவைகளின் அடிப்படையிலும்கூட அதில் ஈடுபடக்கூடாது. சுவிசேஷப் பணி எப்பொழுதும் கர்த்தரின் மகிமையை நோக்கமாகக் கொண்டு அவருடைய இறையாண்மையைக் கருத்தில் கொண்டு அமைய வேண்டும். மனிதனின் தேவைகளைச் சந்திக்கக் கூடியவர் கர்த்தர் மட்டுமே. எனவே, கர்த்தர் மனிதனுடைய விடுதலைக்காக அளித்திருக்கும் சுவிசேஷத்தை அவருடைய சர்வ வல்லமையை மனதில்கொண்டு அதற்கு எந்தவிதத்திலும் பங்கேற்படுத்தாமல், அவரை விசுவாசித்து அறிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் நாம் சுயநலத்துக்கும், உலக ஞானத்துக்கும் அடிமையாகி விடுவோம்.

ரொபட் சூளர் (Robert Schuller) என்ற அமெரிக்க போதகர் வேதத்தில் இருக்கும் அநேக உண்மைகளை நம்புவதில்லை. மனிதன் பாவத்தில் பிறந்திருக்கிறான் என்பதை இந்த மனிதர் மறுதளிக்கிறார். இவர் ஒரு கண்ணாடி மாளிகைபோன்ற சபையைக் கட்டியிருக்கிறார். ஒரு முறை இவர், “மனிதனை மையப்படுத்தாமல் கர்த்தரை மையப்படுத்தியதால்தான் வரலாற்றில் சீர்திருத்தவாதம் வெற்றியடையவில்லை” என்று அலட்சியமாக சொல்லியிருக்கிறார். ரொபட் சூளருக்கு இதிலிருந்து சீர்திருத்தவாத வரலாற்றைப் பற்றிய அறிவில்லை என்பது தெரிகிறது. அத்தோடு சூளர் உலகக் கண்ணோட்டத்தில் சீர்திருத்தவாதத்தைப் பார்த்ததனால்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார் என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது. சீர்திருத்தவாதத்தின் வெற்றியை வரலாறு வெளிப்படையாகக் காட்டுகிறது. சீர்திருத்தவாதம் மனிதன் உருவாக்கிய எழுப்புதல் அல்ல; அது கர்த்தரின் வல்லமையான கிரியை என்பது இந்த மனிதருக்குத் தெரிந்திருக்கவில்லை. ரொபட் சூளரின் தவறான இறையியல் நோக்கு அவருடைய கண்களை மறைத்திருக்கிறது.

அதையும்விட இவர் கர்த்தரின் இறையாண்மையையும் மகிமையை யும்விட மனிதனுடைய விருப்பு, வெறுப்புக்களில் அதிக அக்கறை வைத்திருக்கிறார் என்பதையும் அறிய முடிகிறது.

நாம் இதுவரை பார்த்த இயக்கங்களும், மனிதர்களும் கர்த்தரின் இறையாண்மையில் நம்பிக்கை வைக்கவில்லை. அவர்களுடைய இறை யியல் வேதத்தில் இருந்து புறப்படவில்லை. வேதத்தின் அதிரகாரத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை; அதற்குக் கட்டுப்பட்டு நடக்கும் இருதயத்தை அவர்கள் கொண்டிருக்கவில்லை. இதெல்லாம் கர்த்தரின் இறையாண்மையை அவர்கள் நிராகரித்திருப்பதற்கான அடையாளங் கள். கர்த்தரின் இறையாண்மையை நம்பியிருந்தால் சார்ள்ஸ் பினி பாவிகளுக்கு தன்னுடைய சொந்த முயற்சியால் இரட்சிப்பை அளிக்க முயன்றிருக்கமாட்டார். கர்த்தரின் இறையாண்மையில் நம்பிக்கை வைத்திருந்தால் சபை வளர்ச்சி இயக்கம் இந்துப் பண்பாட்டிற்கும், சமய வழிபாட்டு முறைகளுக்கும் ஏற்றவகையில் கிறிஸ்தவ சபை நிறுவு வதில் ஈடுபட்டிருக்காது. கர்த்தரின் இறையாண்மையில் நம்பிக்கை வைத்திருந்தால் ஹெரல்ட் கேம்பிங் ஆத்துமாக்களைத் திருச்சபையை விட்டு வெளியே வர சொல்லியிருக்க மாட்டார். கர்த்தரின் சர்வ வல்லமையை இவர்கள் எல்லோரும் ஏட்டுப்படிப்பாக மட்டுமே அறிந் திருக்கிறார்கள்.

இதுவரை நாம் பார்த்த இயக்கங்களும், மனிதர்களும் கர்த்தரின் இறையாண்மையை நிராகரித்து நடந்துகொள்வதற்குக் காரணமென்ன என்பதை விளக்குவது அவசியம்.

**(1) வேதத்திற்குப் புறம்பான இறையியல் போதனைகளை இவர்கள் விசுவா சிப்பதால் கர்த்தரின் இறையாண்மைக்கெதிராக செயல்பட நேரிடுகிறது.**

நமது கிறிஸ்தவ நடைமுறைச் செயல்களுக்கெல்லாம் அடிப்படையாக இருப்பது நாம் விசுவாசிக்கும் சத்தியங்கள்தான். அவற்றின் அடிப்படை யில்தான் நாம் எல்லா முடிவுகளையும் எடுத்து கர்த்தருக்குரிய காரியங் களைச் செய்கிறோம். நாம் இதுவரை பார்த்து வந்த இயக்கங்களும், மனிதர்களும் கர்த்தர் சகலத்தையும் ஆளுகிறார் என்று நம்பினாலும், அவருடைய சித்தம் மனிதர்களாகிய நம்முடைய துணையில்லாமல் இந்த உலகத்தில் சகல காரியங்களிலும் நிறைவேற முடியாது என்று நம்புகிறார்கள். கர்த்தர் தம்முடைய சித்தம் நிறைவேற நம்மைப் பயன் படுத்திக் கொள்ளுகிறார் என்று நாம் நம்புகிறோம். ஆனால், அவர்கள் ஒருபடி மேலே போய் நம்முடைய துணையும், பங்கும் இல்லாமல் அவருடைய சித்தம் நிறைவேறாது என்று நம்புகிறார்கள். நாம் விசுவா சிப்பதற்கும், அவர்கள் விசுவாசிப்பதற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. கர்த்தர் சகலத்தையும் ஆளுகிறார் என்று விசுவாசிக்கிற நாம் கர்த்தருடைய சித்தத்தை வேதத்தில் ஆராய்ந்து அதைத் தெளி வாக விளங்கிக் கொண்டு அதற்குக் கட்டுப்பட்டு அதன் அடிப்படை

யில் மட்டும் சகல ஆத்மீகக் காரியங்களையும் செய்யப் பார்ப்போம். அவர்கள் கர்த்தருடைய சித்தம் நிறைவேற தங்களுடைய பங்கும் அவசியமெனக் கருதி, தங்களுடைய சொந்த ஞானத்தின் அடிப்படை யில் சகல ஆத்மீகக் காரியங்களைச் செய்கிறார்கள். கர்த்தருடைய ஆதமீகக் காரியங்களைச் செய்ய அவர்கள் கர்த்தரின் இறையாண்மை யில் தங்கியிருக்கவில்லை. இதுவே அவர்களுடைய தவறான போக்கிற்கு பெருங் காரணமாக இருக்கிறது. சுவிசேஷ ஊழியம், திருச்சபை, பரிசுத்த வாழ்க்கை என்று கிறிஸ்தவத்தின் அத்தனை அம்சங்களையும் அவர்கள் தங்களுடைய தவறான எண்ணங்களின் அடிப்படையிலேயே அனுகு கிறார்கள்.

**(2) தவறான இறையியல் போதனைகளில் இவர்கள் நம்பிக்கை வைத்திருப் பதால் இவர்களுடைய செயல்முறைகள் கர்த்தரின் இறையாண்மைக் கெதிரானதாக அமைகின்றன.**

கர்த்தரின் இறையாண்மையில் பூரண நம்பிக்கை வைத்து அவரு டைய வேதபோதனைகளுக்கு கட்டுப்பட்டு மனித ஞானத்திற்கு இடங் கொடுக்காமல் இருக்கும்போது நாம் சகல ஆத்மீக காரியங்களையும் கர்த்தரை மகிமைப்படுத்தும்படியாக செய்ய முடிகிறது. அப்படியில் லாது, கர்த்தரின் இறையாண்மைக்கு மதிப்புத் தராத இறையியல் கோட் பாடுகளை விசுவாசித்தால் நம்முடைய செயல்முறைகளெல்லாம் கர்த்த ரின் வழிமுறைகளை மீறியே அமைந்திருக்கும். கர்த்தரின் சுவிசேஷம் வெற்றி பெறவேண்டுமானால் மனிதனின் மனநிலைக்குத் தக்கதாக அதைப் பிரசங்கிக்க வேண்டும் என்று நம்பினால் அந்த நம்பிக்கையின் அடிப்படையில் சுவிசேஷத்தை நாம் மாற்றத்தான் செய்வோம். கர்த்த ரின் இறையாண்மையைப் பற்றிய உணர்வில்லாமல், வேதம் போதிக்கும் திருச்சபை பற்றிய ஞானமில் லாமல் இருந்தால் அவை பற்றி நாமே ஒரு போதனையை உருவாக்கிக் கொண்டு கர்த்தரின் பெயரில் தவறான காரியங்களைத்தான் நாம் செய்து கொண்டிருப்போம். நாம் செய்வது தவறா இல்லையா என்று தீர்மானிக்க வேண்டியது நாமல்ல; வேதமே. திருச்சபை ஊழியம் பற்றிய வேதத்தின் போதனைகளுக்கு முரணான போதனைகளைக் கொண் டிருப்பவர்களுடைய செயல்முறைகள் கர்த்தரின் இறையாண்மைக்கு எதிராகத்தான் செயல்பட முடியும்.

கர்த்தர் இறையாண்மையுள்ளவராதலால் அவர் தன்னுடைய திட்டங் களையெல்லாம், தன் சித்தப்படி எந்த மனிதனுடைய உதவியும் இல்லா மல் நிறைவேற்றிக்கொள்கிறவராக இருக்கிறார். தன்னுடைய திட்டங் களை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு அவர் நாடுகளையும், மனி தர்களை யும் பயன்படுத்திக் கொள்கிறபோதும், அவருடைய திட்டங்கள் நிறை வேற மனிதனுடைய உதவி அவருக்குத் தேவையில்லை. மனிதன் விரும்பி னாலும் விரும்பாவிட்டாலும் அவருடைய திட்டங்கள் தொடர்ந்து நிறைவேறும். அவருடைய திட்டங்களைக் குழப்பக் கூடியவர்கள் ஒருவ ரும் இல்லை; அவரைவிடப் பெரியவர் ஒருவரும் இல்லை.

*அத்தோடு, திருச்சபையை இந்த உலகில் நிறுவுவது கர்த்தருடைய திட்டங்களில் ஒன்று. அதைச் செய்ய கர்த்தர் எந்த மனிதனிலும் தங்கியிருக்கவில்லை. தன்னுடைய மகா ஞானத்தினாலும் வல்லமையினாலும் கர்த்தர் அதைச் செய்துவருகிறார். தன்னுடைய சபையை ஏற்கனவே இந்த உலகத்தில் நிறுவியிருக்கும் கர்த்தர் அதைத் தொடர்ந்து சகல தேசங்களிலும் நிறுவி வருகிறார். தனது சபை இந்த உலகத்தில் அப்போஸ்தலர்களின் போதனைகளின் அடிப்படையில் எவ்வாறு தொடர்ந்து எல்லா இடங்களிலும் நிறுவப்பட வேண்டும் என்பதையும் தெளிவாக வேதத்தில் எழுத்தில் தந்திருக்கிறார். சபையைக்குறித்த நமக்குத் தேவையான அத்தனை போதனைகளும் வேதத்தில் இருக்கின்றன. சுவிசேஷத்தை யார் சொல்ல வேண்டும்? அவர் எங்கிருந்து அனுப்பப்பட வேண்டும்? திருச்சபை விசுவாசிகளைக் கொண்டு எவ்வாறு நிறுவப்பட வேண்டும்? என்றெல்லாம் வேதம் போதிக்கின்றது. நிலமை இப்படியிருக்க கர்த்தரின் தெளிவான போதனைகளை நம் காலத்துக்கு உதவாது என்று மாற்றி அமைப்பதோ அல்லது மனிதர்களுக்குப் பிடிக்காது என்று விலக்கி வைப்பதோ அல்லது மனித ஞானத்தின்படி திருச்சபையை நிறுவ முயல்வதோ கர்த்தரின் இறையாண்மையை முற்றாக நிராகரித்ததற்கு ஒப்பானதாகும்.*

*மத்தேயு 28:18–20 வரையுள்ள வசனங்களில் காணப்படும் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் சுவிசேஷ ஊழியத்திலும், திருச்சபை நிறுவுவதிலும் அவருக்குள்ள இறையாண்மையை தெளிவாக விளக்கின்றன: "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமேன்."*

---

*(29ம் பக்கத் தொடர்ச்சி)*

*பின்பற்றுவதில் தவறில்லை. ஒரு பெண் பண்பாட்டின் பெயரில் தன்னுடைய தலையை சேலைத் தலைப்பால் மூடிக்கொள்ளுவதில் தவறில்லை. இங்கு பிரச்சனை தனியொரு நபர் தனக்குப் பிடித்ததை செய்யலாமா? செய்யக்கூடாதா? என்பதல்ல. கிறிஸ்தவர்களை நாம் கர்த்தருடைய வார்த்தை எதிர்பார்க்காத எந்தக் காரியத்தையும் செய்ய வற்புறுத்தலாமா? கூடாதா? என்பதுதான். கர்த்தருடைய வார்த்தை செய்யச் சொல்லாத எந்தக் காரியத்தையும் அவை ஆரோக்கியமானதாக இருந்தாலும் மற்றவர்கள் பின்பற்றும்படி நாம் கட்டளையிட முடியாது. ஆகவே, சேலைத் தலைப்பை முக்காடாக்கியது பண்பாடே தவிர கர்த்தரல்ல.*

# சபையில் பெண்கள் முக்காடிட வேண்டுமா?

சமீபத்தில் என் கையில் கிடைத்த ஒரு கிறிஸ்தவ பத்திரிகையில் மேற்குறிப்பிட்ட தலைப்பில் ஒரு ஆக்கம் வந்திருந்தது. 1 கொரிந்தியர் 11:5ம் வசனத்தை ஆதாரமாகக் கொண்டு சபையில் பெண்கள் முக்காடிட்டு ஆராதனை செய்ய வேண்டும் என்பதை ஆதரித்து அந்த ஆக்கம் எழுதப்பட்டிருந்தது. அந்த ஆக்கத்தை ஆர்வத்தோடு முழுமையாக வாசித்தபொழுது அதை எழுதியவர் எங்குமே 1 கொரிந்தியர் 11:5க்கு எந்த விளக்கத்தையும் தரவில்லை என்பதைக் கவனித்தேன். நமது மக்கள் கிறிஸ்தவ வேதத்தின் அடிப்படையில் ஒரு காரியத்தைப் பின்பற்ற வேண்டுமென்று நாம் வற்புறுத்துவதானால் அவர்கள் அந்தக் காரியத்தைப் பின்பற்றும்படி வலியுறுத்தும் ஆரோக்கியமான வேதவிளக்கங்களை அவர்கள் முன்பு வைப்பதற்கு முதலில் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நமது இனத்தைப் பிடித்திருக்கும் ஒரு வியாதியே எந்தவொரு விஷயத்தையும் வேத அடிப்படையில் இல்லாது பாரம்பரியத்தின் அடிப்படையிலும், பண்பாட்டின் அடிப்படையிலும் நமது மக்கள் மேல் திணிப்பதுதான். அது முழுத்தவறு. வேத ஆதாரமில்லாத எந்தக் காரியத்தையும் எந்தக் கிறிஸ்தவ சபையும், போதகரும், தனி மனிதனும் சொன்னாலும் நாம் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை.

இரண்டாவதாக, ஆக்கத்தை எழுதியவர் பெண்கள் சபையில் முக்காடிட்டு ஆராதிப்பதைப் பண்பாட்டை மட்டும் காரணம் காட்டி வலியுறுத்தியிருந்தார். அதாவது, அப்படிச் செய்தால் அவர்கள் அழகாகவும், அடக்கமாகவும், மரியாதையோடும், ஆண்களுக்கு முன் நாணத்தோடும் இருப்பதற்கு அது உதவும் என்று காரணம் காட்டியிருந்தார். ஆணாதிக்கம் அதிகமாகவும், பெண்கள் அடக்கியாளப்பட்டும் இருந்த ஒரு சமுதாயத்தில் கிறிஸ்தவம் பரவியபோது பெண்களுக்கு மரியாதை தரும் வழக்கம் ஏற்பட்டதாகவும், அதனால் பாதிப்பு ஏற்பட்டு பெண்கள் தங்கள் நிலைமையை மறந்து ஆண்களுக்கு சமமாக நடந்துவிடாமல் இருக்கவும், ஆண்களுக்கு முன் அவர்கள் நாணத்தோடு நடந்துகொள்ளவும் உதவுமுகமாக முக்காடிடும் வழக்கத்தை பவுல் ஏற்படுத்தியதாகவும் ஆக்கத்தை எழுதியவர் விளக்கியிருந்தார். அதுவும் முழுத்தவறு. ஏனெனில், சபைப் பெண்கள் ஆராதனை வேளையில் பின்பற்ற வேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்ற, கர்த்தரின் ஆராதனையோடு தொடர்புடைய ஒரு காரியத்தை பண்பாட்டின் அடிப்படையில் செய்யும்படி வற்புறுத்துவதற்கு எந்தச் சபைக்கோ, தனிமனிதனுக்கொ அதிகாரமில்லை. அதை வேதம் எதிர்க்கிறது. பண்பாட்டை மட்டும் அடிப்படையாக வைத்து கிறிஸ்தவர்கள் ஒரு காரியத்தைப் பின்பற்ற வேண்டும்

என்று பவுல் எந்த இடத்திலும் வலியுறுத்துவதை நாம் புதிய ஏற்பாட்டில் வாசிப்பதில்லை.

அப்படியானால் பெண்கள் சபைகளில் முக்காடிட்டு ஆராதனை செய்ய வேண்டுமா, என்ற கேள்வியை நாம் எவ்வாறு அணுக வேண்டும்? முதலில், அத்தகைய நடைமுறையைப் போதிக்கின்ற வேதப்பகுதிகள் இருக்கின்றனவா என்பதைத் தேடிப்பார்த்து, அந்தப் பகுதிகளில் என்ன விளக்கப்பட்டிருக்கின்றது என்பதை ஆராய்வது அவசியம். எந்தவொரு வேதப்பகுதியையும் அதற்குரிய வரலாறு, மொழியியல், இலக்கண அடிப்படையில் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பது வேதவிதி. இந்த விதியை மீறி எந்தவேதப்பகுதிக்கும் விளக்கம் தர முயல்வது நீச்சல் தெரியாதவன் ஆற்றைக் கடக்க முயல்வது போன்றதில் போய் முடியும். இந்தவிதமாக வேதத்தைப் படித்துப் புரிந்து கொள்ளுவதை சிலர் ஆவிக்குரிய பார்வையில்லை என்று ஒதுக்கிவிடப் பார்க்கிறார்கள். வரலாறு, மொழியியல், இலக்கண அடிப்படையில் வேதத்தைப் படிக்கத் தெரியாதவர்களுக்கே ஆவிக்குரிய பார்வை இருக்காது. ஏனெனில் வேதத்தை நமக்குத் தந்திருக்கும் வரலாற்றின் தேவன் அதை வரலாறு, மொழி, இலக்கண அமைப்போடேயே தந்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் ஆவிக்குரிய போதனையை நாம் வேதத்திலிருந்து பெற்றுக் கொள்ளுவதானால் இந்த அடிப்படையிலேலே படித்து அறிந்து கொள்ள வேண்டும். இன்று ஊழியம் செய்பவர்களில் பலருக்கு இந்த அறிவெதுவும் இல்லாமலிருப்பதால்தான் வேதத்தை “சிதம்பர இரகசியம்” போன்றதாக்கி ஆத்துமாக்களை இருட்டில் வைத்திருக்கிறார்கள்.

பெண்கள் சபையில் முக்காடிட்டு ஆராதனை செய்ய வேண்டும் என்ற போதனையைத் தருவதுபோல் தோற்றமளிக்கும் புதிய ஏற்பாட்டிலிருக்கும் ஒரே பகுதி 1 கொரிந்தியர் 11 மட்டும்தான். இதை வாசிக்கும் போதே நமக்கு முதலில் ஒன்று விளங்க வேண்டும். எப்போதும் ஒரு வசனத்தை மட்டும் வைத்துக்கொண்டு நாம் பின்பற்றும்படியான ஒரு போதனையை வேதத்தில் இருந்து உருவாக்கக்கூடாது. பல வேதப் பகுதிகளாலும், பல வசனங்களாலும் நிரூபிக்கப்படுகிற ஒரு போதனையே வலிமைமிக்கது என்பது வேதவிதி. இது மனிதன் ஏற்படுத்திய விதியல்ல; கர்த்தரின் வார்த்தை சுட்டிக்காட்டும் விதி.

அடுத்ததாக, இந்த வேதப்பகுதி ஏனைய வேதப்பகுதிகளைப் போல விளங்கிக் கொள்ளுவதற்கு இலகுவானதல்ல என்பதையும் அறிந்து கொள்வது அவசியம். அவ்வாறான நிலையில் இந்தப் பகுதியை நாம் கவனத்தோடு அனுக வேண்டும். 1 கொரிந்தியர் 11ம் அதிகாரம் 1–16 வசனங்களும் கர்த்தர் சமுதாயத்தில் ஆணையும், பெண்ணையும் படைத்து அவர்கள் எந்த நிலையில் இருந்து பணிபுரிய வேண்டும் என்ற நியமித்திருக்கிறார் என்பதை விளக்குகின்றது. அதுவே இந்தப் பகுதியின் பிரதான போதனை. ஆணுக்கு தலைமைத்துவத்தை தந்து ஆணோடு இணைந்து அவனுக்கு அடங்கி பெண் நடந்துகொள்ள

*வேண்டுமென்று கர்த்தர் ஆணையும், பெண்ணையும் நியமித்திருக்கிறார். இதுவே இந்தப் பகுதியின் பிரதான போதனை (1 கொரி. 3). இந்த வேதப்பகுதியின் ஏனைய வசனங்கள் இந்தப் பிரதானப் போதனையை மேலும் விளக்குவதற்காகத் தரப்பட்ட நடைமுறை உதாரணங்களாக விளங்குகின்றன. தரப்பட்டிருக்கின்ற உதாரணங்களைப் பிரதான போதனையின் அடிப்படையில் மட்டுமே நாம் விளங்கிக் கொள்ள முயல வேண்டும். இங்கே தரப்பட்டிருக்கின்ற நடைமுறை உதாரணம் ஆணும், பெண்ணும் இணைந்து காணப்படுகின்ற இடங்களில் அவர்கள் நடத்தை எவ்வாறு இருக்க வேண்டுமென்பதை விளக்குவதாக உள்ளது. 4ம் வசனத்தில் ஆணும், பெண்ணும் கூடிவருகின்ற இடங்களில் பெண் தன் தலையை "மூடிக்கொள்ள வேண்டும்" என்று இருக்கிறது. அதற்கு அடுத்த 6ம் வசனம் அவர்கள் "முக்காடிட்டுக் கொள்ள வேண்டும்" என்கிறது. அதே வசனம் தொடர்ந்து அப்படி முக்காடிட்டுக் கொள்ளா விட்டால் "தலைமயிரையும் கத்தரித்துப் போடக்கடவள்" என்கிறது. இந்த வசனங்களை முதலாம் வசனத்திலிருந்து 16ம் வசனம் வரை மீண்டும் தொடர்ந்து வாசித்துப் பார்த்தால் இப்பகுதியில் குறிப் பிடப்பட்டுள்ள மூன்று வாசகங்களான "மூடிக்கொள்ள வேண்டும்", "முக்காடிட்டுக் கொள்ள வேண்டும்", "தலைமயிரைக் கத்தரித்துக் கொள்ள வேண்டும்" ஆகியவற்றிற்கிடையில் பெருந்தொடர்பிருப்பதை உணர வேண்டும். அதாவது, இவை மூன்று வித்தியாசமான காரியங் களை விளக்காமல் ஒரே காரியத்தை விளக்குவதாக இருக்கின்றன. முக்காடிடுவதற்கும், மூடிக்கொள்வதற்கும், தலைமயிருக்கும் தொடர் பிருக்கின்றன. இதை விளங்கிக் கொண்டால் மட்டுமே இந்தப் பகுதி யைப் புரிந்துகொள்ள முடியும். அது என்ன தொடர்பு? இப்பகுதியில் பவுல், பெண்களுக்கு கர்த்தர் இயற்கையாகக் கொடுத்திருக்கின்ற நீளமான தலைமயிரையே "முக்காடு" என்று விளக்குகிறார். இதைப் புரிந்துகொள்ளாவிட்டால் 6ம் வசனத்தை விளங்கிக் கொள்ள முடியாது. 15ம் வசனம் இதை சந்தேகமில்லாமல் விளக்குகிறது – "தலைமயிர் அவளுக்கு முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது".*

*ஆகவே, ஆணிலிருந்து வேறுபடுத்தி நீளமான மயிருடன் பெண்ணைக் கர்த்தர் படைத்து, அவள் ஆணைவிட வித்தியாசமானவள் என்பதை உணர்த்தி, ஆணும் பெண்ணுமாக மனிதர்கள் கூடிவருகின்ற இடங்களில் பெண் தன் நீளமான தலைமயிரை கவனமாக வாரிச்சீவி முடித்து ஆண்களை மதித்து நடந்துகொள்ள வேண்டும் என்கிறார் பவுல். ஆண் கள் தலைமைத்துவத்தைப் பெற்றிருப்பதால் (3, 7, 9) அவர்களுக்கு இந்த விதமான "முக்காடு" தேவையில்லை. அப்படி ஆண் தன் மயிரைப் பெண்ணைப் போல வளர்த்துக் கொள்வது அவனுக்கு அழகல்ல; அப்படிச் செய்தால் அவன் தன்னையே அவமானப்படுத்திக் கொள் கிறவனாகிறான் (14). ஆகவே, இந்தப் பகுதியில் முக்காடு என்பது பெண் களின் சேலைத் தலைப்பையோ அல்லது கைக்குட்டையையோ குறிக்கவில்லை. அது பெண்களுக்கு கர்த்தர் இயற்கையாகக் கொடுத்*

திருக்கும் நீளமான மயிரையே குறிக்கின்றது. அதுவே அவளுக்கு முக்காடு. பெண் தலைவிரிகோலமாக இருப்பதும், தலைமயிரை ஆண்க ளுடையதைப் போலக் கத்தரித்துக் கொள்ளுவதுமே அலங்கோலமான தும், ஆண்களையும், ஏன், கர்த்தரையும் அவமதிக்கின்ற செயல்களாகும்.

அடுத்ததாக, பெண்கள் தங்கள் நீளமான மயிரை முக்காடாகக் கருதி ஆண்களின் தலைமைத்துவத்திற்கு மதிப்பளித்து எங்கே நடந்துகொள்ள வேண்டும்? என்ற கேள்விக்குப் பதில் அவசியம். இதற்குப் பதிலளிக்கும் போது இந்தப் பகுதி பற்றிய ஒரு முக்கிய அம்சத்தைக் கவனிக்கத் தவறக்கூடாது. (1) இந்தப் பகுதி சபை ஆராதனை தவிர்ந்த அனைத்துப் பொதுவான இடங்களைக் குறித்துப் பேசுவதை முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். 17ம் வசனத்திலிருந்தே பவுல் சபை கூடி வரும்போது நடக்க வேண்டிய காரியங்களைக்குறித்துப் பேச ஆரம்பிக்கிறார் ("நீங்கள் கூடிவருதல்" என்பது சபை கூடிவருதலைக் குறிக்கும் பதமாகும்.) அப்படி யானால் சபை ஆராதனை வேளையில் பெண்கள் ஆண்களை மதித்து நடக்க வேண்டியதில்லையா? என்ற கேள்வி எழும். நிச்சயம் மதித்து நடக்கத்தான் வேண்டும். எல்லா இடங்களிலும் ஆண்களை மதித்து நடக்க வேண்டும். ஆனால், 1 கொரி. 11:4, 5, 13 ஆகிய வசனங்கள் முக் கியமாக சபை ஆராதனை தவிர்ந்த இடங்களில் பெண்கள் ஆவிக்குரிய கிரியைகளை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை விளக்குகின்றன. ஏனெனில், 5ம் வசனத்திலும், 13ம் வசனத்திலும் பவுல் பெண்கள் ஜெபிக் கும்போது என்று கூறுவதைப் பார்க்கிறோம். அதே அப்போஸ்தலன் 1 கொரி. 14ம் அதிகாரத்தில் பெண்கள் சபை ஆராதனை வேளையில் ஜெபிப்பதற்கும் பேசுவதற்கும் அனுமதி தரவில்லை. இதை விளக்கும் சிலர் பவுல் முரண்பாடாகப் பேசுவதாகக் கூறுவார்கள். இது பவுலு டைய வார்த்தைகள் மட்டுமல்ல, பரிசுத்த ஆவியினுடைய வார்த்தை களுமாகும். ஆகவே, முரண்பாடு பவுலின் வார்த்தைகளிலல்ல. நாம்தான் இந்த இருவேறு சந்தர்ப்பங்கள் யாவை என்பதை ஆராய்ந்து பார்த்து விளங்கிக்கொள்ள வேண்டும். ஆகவே, இந்த இடத்தில் "பெண்கள் ஜெபிக்கும்போது" என்று பவுல் குறிப்பிடுவது சபை ஆராதனை தவிர்ந்த ஏனைய இடங்களான பெண்கள் ஜெபக்கூட்டம், குடும்ப ஆராதனை போன்ற இடங்களாகும். சபை ஆராதனை வேளைகளில் ஆண்களை மதித்து நடந்து பெண்கள் சபையில் பேசவோ, ஜெபிக்கவோ முயலக் கூடாது. சபைக்கு வெளியில் ஆண்களை மதித்து நடந்து பெண்கள் அடக்கத்துடன் ஜெபிக்கலாம், பேசலாம்.

நாம் இதுவரை பார்த்ததிலிருந்து பெற்றுக் கொண்டுள்ள உண்மை களைப் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்:

(1) பெண்கள் எந்த இடத்திலும் படைப்பில் கர்த்தர் தங்களுக்கு விதித் திருக்கும் நிலமையை மீறி நடந்துகொள்ளக் கூடாது.

(2) பெண்கள் சபை ஆராதனைவேளைகளில் ஆண்களை மதித்து அமைதலுடன் நடந்து அங்கு ஜெபிக்கவோ, அதிகாரத்துடன் பேசவோ

கூடாது.
(3) பெண்கள் சபை ஆராதனை தவிர்ந்த இடங்களில் ஆண்களை மதித்து அடக்கத்துடன் நடந்து ஜெபிக்கவும், பேசவும் முடியும்.
(4) இந்த இடங்களிலெல்லாம் பெண்கள் தங்களுக்கு இயற்கையாக கர்த்தர் அளித்திருக்கும் முக்காடான தலைமயிரை வாறிச் சீவிப்பிண்ணி பெண்ணைப் போலத்தொற்றமளித்து சக ஆண்களை மதித்து அடக்கத்துடன் நடந்துகொள்ள வேண்டும்.

## முக்காடு அவசியமா?

அப்படியானால் பெண்கள் ஆராதனை வேளைகளில் முக்காடணிவது அவசியமா? நாம் ஏற்கனவே இந்தப் பகுதியில் பார்த்தபடி முக்காடு என்பது பெண்களுக்கு இயற்கையாக கொடுக்கப்பட்டிருக்கின்ற நீளமான மயிரைக் குறிக்கிறது (15). ஆகவே, பெண்கள் தங்கள் தலைமயிரை வாறிச் சீவி முடித்து சபையில் இருப்பது அவர்கள் ஆண்களை மதித்து நடந்து முக்காடிட்டிருப்பதற்கு சமம். 1 கொரிந்தியர் 11:1–16 வரையிலான பகுதி சேலைத் தலைப்பையோ அல்லது கைக்குட்டையையோ முக்காடாகக் குறிக்கவில்லை. சேலைத் தலைப்பால் தலையை மூடிக்கொள்ளும்படி கர்த்தர் இப்பகுதியில் கட்டளையிடவில்லை.

சேலைத் தலைப்பால் முக்காடிடுவதை விட்டுவிட்டால் பெண்கள் மத்தியில் ஒழுக்கம் குன்றிவிடுமே? என்று கேட்கலாம். இன்று பெண்களின் நடையுடை பாவனைகள் மோசமாகப் போய்க் கொண்டிருப்பதால் இதையும் விட்டுவிட்டால் அவர்கள் மேலும் சிரழிந்து விடுவார்கள் என்று வாதிடலாம். வெறும் சேலைத்தலைப்பும், நீளமான வெள்ளைத்துணியும் பெண்களின் நடத்தையை ஒழுக்கமுள்ளதாக்கி விடாது. அப்படியானால் நமது ஒழுக்கத்தைப் பாதுகாக்க கர்த்தர் எத்தனையோ புறசாதனங்களை மட்டும் ஏற்படுத்தியிருப்பார். வெறும் சேலைத தலைப்பால் பெண்களின் புற ஒழுக்கத்தை மட்டும் சரி செய்யப் பார்ப்பது சரியல்ல; அவர்களுடைய அகத்தில் அடங்கியிருக்கும் பாவங்களை சுவிசேஷப் பிரசங்கத்தின் மூலம் சரிசெய்யப் பார்க்க வேண்டும். பெண்கள் தங்களுடைய நீளமான தலைமயிரை முக்காடாகப் பயன்படுத்தும்படிக் கர்த்தர் கூறியது அவர்கள் தாங்கள் எதற்காகப் படைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை மறந்து ஆண்களின் பணிகளைச் செய்ய ஆரம்பித்துவிடக் கூடாது என்பதற்காகத்தான்.

பவுல் சொன்னார் என்பதற்காக அல்லாமல் நமது பண்பாட்டைப் பாதுகாக்க ஒரு காரியம் ஆரோக்கியமானதாக இருக்குமானால் அதைச் செய்வதில் என்ன தவறு? என்று நாம் மேலே பார்த்த பத்திரிகை ஆசிரியர் கேட்கிறார். உண்மையில் பவுல் அப்படிச் சொல்லியிருந்தால் செய்யத்தான் வேண்டும். ஆனால், பவுல் அப்படிச் சொல்லவில்லை என்பதை ஏற்கனவே விளக்கிவிட்டேன். அடுத்ததாக, பண்பாட்டின் பெயரில் ஆரோக்கியமான எந்தக் காரியத்தையும் தனியொரு நபர்
(24ம் பக்கம் பார்க்கவும்)

***கேள்வி**: 94 தன்னால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களைப் பராமரிக்கவும், கிறிஸ்துவின் மீட்பின் ஆசீர்வாதங்களை அவர்கள் அடையவும் கர்த்தர் பயன் படுத்தும் வெளிப்புறமானதும் சாதாரணமானதுமான கிருபையின் சாதனங்கள் யாவை?*

***பதில்**: முக்கியமாக வார்த்தை, திருமுழுக்கு, திருவிருந்து, ஜெபம் ஆகிய திருநியமங் களையே கர்த்தர் தன்னால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களைப் பராமரித்து கிறிஸ்துவின் மீட்பின் ஆசீர்வாதங்களை அவர்கள் அடையப் பயன்படுத்தும் வெளிப்புறமானதும் சாதாரணமானதுமான கிருபையின் சாதனங்கள். இவை யனைத்தும் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் இரட்சிப்பை அடையும்விதமாக திட்ப உறுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.*

*(மத்தேயு 28:19-20; அப்போஸ்தல நடபடிகள் 2:41-42; 46-47.)*

**விளக்கவுரை:** *88-வது வினாவிடையில் இரட்சிப்பை அடைவதற்கு ஒருவனில் கர்த்தர் எதிர்பார்க்கும் உள்ளார்ந்த கிருபைகளைப் பார்த் தோம். மனந்திரும்புதலும், விசுவாசமுமே அந்த உள்ளார்ந்த கிருபைகள். இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கில் (கிறிஸ்துவின் மீட்பின் பலன்கள் எவ்விதமாக தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு நடைமுறையில் கொடுக்கப்படுகிறது என்பது பற்றிய விளக்கம்) இவை அடங்குகின்றன. இந்த உள்ளார்ந்த கிருபைகள் பரிசுத்த ஆவியின் கிரியையினால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு அளிக்கப்படுகின்றன.*

*அதேவேளை, மீட்பின் பலன்களைத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அனுபவிப்பதற்கு ஒரு சில சாதாரணமானதும், வெளிப்புறமானதுமான கிருபையின் சாதனங்களையும் கர்த்தர் பயன்படுத்துகிறார். கர்த்தரால் நியமிக்கப்பட்டிருக்கும் இந்த வெளிப்புற கிருபையின் சாதனங்களின் மூலமாகவே பரிசுத்த ஆவியானவர் பொதுவாக தெரிந்துகொள்ளப் பட்டவர்களில் கிரியை செய்கிறார்.*

*இந்த உள்ளார்ந்த கிருபைகளுக்கும், வெளிப்புற கிருபையின் சாதனங் களுக்கும் இடையில் உள்ள தொடர்புகளை நாம் தெளிவாக அறிந்து வைத்திருப்பது மிகவும் அவசியம்.*

**(1) ரோமன் கத்தோலிக்க மதப் போதனை** – *ரோமன் கத்தோலிக்க மதம் இந்த (உள்ளார்ந்த கிருபைகள்/வெளிப்புற கிருபையின் சாதனங் கள்) இரண்டிற்கும் இடையில் எந்த வேறுபாடும் இல்லை என்று போதிக்கிறது. கத்தோலிக்க மதம் மனிதனுக்கு கிருபையை அளிக்கும் தகுதி தனக்கே இருக்கிறது என்று கருதுகிறது. அதாவது, மனிதனுக்கு தானே இரட்சிப்பை வழங்கும் தகுதியைக் கொண்டிருப்பதாக அது போதிக்கிறது. எனவே, வெளிப்புற கிருபையின் சாதனங்களின் மூலம்*

*கத்தோலிக்க மதம் மனிதனுக்கு அந்தக் கிருபையை வழங்குவதாகக் கூறுகிறது. ஆகவே, அதன் போதனையின்படி வெளிப்புற கிருபையின் சாதனங்களில் ஒருவிதத்தில் உள்ளார்ந்த கிருபை உள்ளடங்கியிருக்கிறது. வெளிப்புற கிருபையின் சாதனங்களைத் தவறாகப் பயன்படுத்தினால் மட்டுமே ஒருவருக்கு கிருபை கிடைக்காமல் போகலாம். வெளிப்புற சாதனங்கள் சரியாகப் பயன்படுத்தப்படுகிறபோது மனிதன் அதன் மூலம் சாதாரணமாக கிருபையைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது இந்த மதப்போதனை. இதனால்தான் ரோமன் கத்தோலிக்க மதம் ஞானஸ்நானத்தின் மூலம் ஒருவர் மறுபிறப்பை அடையாளம்* (Baptismal Regeneration) *என்ற போதனையைக் கொடுக்கிறது. இந்தப் போதனையின்படி பிறக்கும் குழந்தைகளுக்கு சரியானவிதத்தில் ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்போது அவர்கள் இரட்சிப்பை அடைகிறார்கள் என்கிறது கத்தோலிக்க மதம். இது மிகவும் தவறானதும், ஆபத்தானதுமான போதனை. பழைய ஏற்பாட்டு யூதர்களும், பரிசேயர்களும் இதே விதமான நம்பிக்கையைக் கொண்டிருந்தார்கள். விருத்தசேதனம் செய்துகொண்ட ஒவ்வொருவரும் ஆபிராகாமின் விசுவாசத்தைக் கொண்டிருப்பதாக அவர்கள் தவறாக நம்பிக்கொண்டிருந்தார்கள். பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்திலும், கலாத்தியருக்கு எழுதிய நிருபத்திலும் இதைக் கண்டித்து திருத்துகிறார்.*

*(2)* ***இரட்சண்யப் படை*** *– இரட்சண்யப் படை* (Salvation Army) *என்று அழைக்கப்படுகின்ற இயக்கம் வெளிப்புற கிருபையின் சாதனங்களைப் பயன்படுத்துவதில்லை. அவர்கள் வாராவாரம் கூடி ஆராதனை செய்தபோதும் திருமுழுக்கையும், திருவிருந்தையும் வழங்குவதில்லை. இவர்கள் வெளிப்புற கிருபையின் சாதனங்கள் அவசியமில்லை என்ற நம்பிக்கையைக் கொண்டிருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது. இந்த இயக்கம் பிரசங்கம் கர்த்தரால் நியமிக்கப்பட்டிருக்கும் கிருபையின் சாதனங்களில் ஒன்று என்பதை வலியுறுத்துகிறது. ஆனால், இவர்கள் உள்ளார்ந்த கிருபைக்கும், வெளிப்புற கிருபையின் சாதனங்களுக்கும் இடையில் எந்தவிதமான தொடர்பும் இருப்பதாகக் கருதவில்லை. இதுவும் முழுத் தவறு. ஏனெனில், கர்த்தரே வெளிப்புற கிருபையின் சாதனங்களை நியமித்து அவற்றைப் பயன்படுத்துமாறு பணித்திருக்கிறார் (மத்தேயு 28:18–20). வெளிப்புற கிருபையின் சாதனங்களுக்கும், உள்ளார்ந்த கிருபைகளுக்கும் இடையில் பெருந்தொடர்பிருப்பதை மத்தேயு 28:18–20 பகுதி தெளிவாக விளக்குகிறது.*

*(3)* ***சீர்திருத்தப் போதனை*** *– சீர்திருத்தப் போதனை உள்ளார்ந்த கிருபைகளுக்கும், வெளிப்புற கிருபையின் சாதனங்களுக்கும் இடையில் பிரிக்க முடியாத தொடர்பிருப்பதாகக் கருதுகிறது. கர்த்தர் இணைத்து வைத்திருப்பதை ஒருவரும் பிரிக்கக் கூடாது என்று நம்புகிறது. கர்த்தரால் தன்னுடைய கிருபையின் சாதனங்களை மீறிச் செயல்பட முடியும். கிருபையின் சாதனங்கள் கர்த்தரை ஒருபோதும் கட்டுப்படுத்துவ*

தில்லை. இருந்தபோதும் தான் நியமித்துள்ள வெளிப்புற கிருபையின் சாதனங்களின் மூலம் கிரியை செய்வது கர்த்தரின் சித்தமாகவும், திட்ட மாகவும், அவருக்குப் பிடித்தமானதாகவும் இருக்கிறது. தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு இரட்சிப்பை அளித்து, பரிசுத்த வாழ்க்கை யில் அவர்களைப் பராமரிக்க கர்த்தர் வெளிப்புற கிருபையின் சாதனங் களையே பயன்படுத்தி வருகிறார். பிரெஸ்பிடீரியன் சபையைச் சார்ந்த வர்கள், பிறக்கும் குழந்தைகளைப் பொறுத்தவரையில் கர்த்தர் வெளிப் புற கிருபையின் சாதனங்களின் உதவியில்லாமல் அவர்களுக்கு மறுபிறப்பை அளிக்கிறார் என்ற தவறான போதனையைக் கொண்டிருக் கிறார்கள். நமது 1689 விசுவாச அறிக்கை அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

இரண்டு உண்மைகளை இந்த வினாவிடை நமக்கு வெளிப்படுத்து கிறது: (அ). வெளிப்புற கிருபையின் சானங்களுக்கு தம்மை ஒப்புக் கொடுக்கிறவர்களிலேயே சாதாரணமாக நாம் உள்ளார்ந்த கிருபையின் அடையாளங்களைக் காணமுடிகின்றது. பிரசங்கத்தின் ஆசீர்வாதத் தையும், திருமுழுக்கு, திருவிருந்து ஆகிய திருநியமங்களையும், திருச் சபையின் ஒழுங்குக் கட்டுப்பாட்டையும் விசுவாசத்தோடு ஏற்று நடப்ப வர்களிலேயே உள்ளார்ந்த கிருபையை சாதாரணமாகக் காணலாம். (ஆ). அதேவேளை, அப்போஸ்தல நடபடிகள் 8:23ல் நாம் வாசிப்பது போல் தவறாக திருமுழுக்கைப் பெற்றுக்கொண்ட சீமோனைப் போன்ற உள்ளார்ந்த கிருபையைத் தம்மில் கொண்டிராதவர்களும் இருந்து விட லாம். சீமோன் பிரசங்கத்தைக் கேட்டும் மெய்யாக மனந்திரும்பியதாகத் தெரியவில்லை. அவன் திருமுழுக்கு பெற்றிருந்தும் தேவனை அறியாத வனாக இருந்தான். இதனால், நாம் வெளிப்புற கிருபையின் சாதனங் களை மிகைப்படுத்தி உள்ளார்ந்த கிருபையை ஒருபோதும் அலட்சியப் படுத்திவிடக்கூடாது. உள்ளார்ந்த கிருபைகளான மனந்திருப்புதலும், விசுவாசமும் இருக்கும் பட்சத்திலேயே வெளிப்புற கிருபையின் சாதனங் களின் பலன்களை நாம் நம்முடைய ஆத்தும விருத்திக்காக அடைய முடியும்.

இதிலிருந்து நாம் வெளிப்புற கிருபையின் சாதனங்களைக் குறைத்து மதிப்பிட்டுவிடக்கூடாது என்பதை இந்த வினாவிடை உணர்த்துகிறது. அதாவது, அவற்றை நடைமுறையில் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் ஆத்மீக வளர்ச்சி குன்றிவிடாது என்று நெஞ்சில் பயமில்லாமல் நடந்து கொள்ளக் கூடாது. இங்கே நாம் உள்ளூர் திருச்சபைகளின் முக்கியத்து வத்தை ஒருமுறை எண்ணிப் பார்ப்பது அவசியம். விசுவாசமுள்ள உள் ளூர் திருச்சபைகள் அனைத்தும் மூன்று முக்கிய அடையாளங்களைத் தவறாது கொண்டிருக்கும். (1) விசுவாசமுள்ள பிரசங்கம் அங்கே காணப் படும் (2) விசுவாசத்துடன் திருநியமங்கள் கொடுக்கப்படும். (3) தேவபயத் தோடு சபை ஒழுங்குக் கட்டுப்பாடு கடைப்பிடிக்கப்படும். இந்த மூன்று அடையாளங்களையும் கொண்டிராதவை விசுவாசமுள்ள கர்த்தருடைய சபைகள் அல்ல. உலகத்தில் இருக்கின்ற சபைகள் அத்தனையும் விசுவாச

முள்ளவையாக இருந்துவிடாது. அவற்றில் சத்தியத்தைப் புறக்கணித் தவை அதிகமாகவே இருக்கும். அதேவேளை, விசுவாசமுள்ள நல்ல சபைகளுக்குள்ளும் போலிகள் தவறி இருந்து விடலாம். இதெல்லாம் உண்மையாக இருந்தபோதும் விசுவாசமுள்ள சபைகளுக்கும், விசுவாச மற்று சத்தியத்தைப் புறக்கணித்து நடக்கின்ற சபைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை நாம் கவனித்து சத்தியத்தைப் பின்பற்றி கர்த்த ருக்கு விசுவாசமாயிருக்கின்ற சபைகளில் இணைந்து வாழ வேண்டும்.

அத்தோடு, உள்ளூர் சபையில் அங்கத்தவர்களாக இருந்து சபை வாழ்க்கை நடத்தாமல் இருந்துவிடலாம் என்ற தவறான எண்ணத்தை யும் நாம் கொண்டிருக்கக் கூடாது. உள்ளூர் திருச்சபையில் திருநியமங் களுக்கும், கிருபையின் சாதனங்களுக்கும் தன்னை ஒப்புக்கொடுத்து வாழாத மனிதன் கிறிஸ்தவ வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்தி விடலாம் என்று எண்ணுவது வீண் பிரேமை. கர்த்தர் நமக்கு மனந் திரும்புதலையும், விசுவாசத்தையும் (உள்ளார்ந்த கிருபைகள்) கொடுத்து அவற்றைப் பராமரிக்க திருச்சபைகளின் மூலமாக வெளிப்புற கிருபை யின் சாதனங்களையும் அளித்திருக்கிறார். “அங்கே கர்த்தர் என்றென் றைக்கும் ஆசீர்வாதத்தையும், ஜீவனையும் கட்டளையிடுகிறார்.” (சங்கீதம் 133:3). வெளிப்புற கிருபையின் சாதனங்களை உள்ளூர் திருச் சபைகளில் மட்டுமே பெற்றுக் கொள்ள வேண்டும். அவற்றைக் கொடுக் கும் அதிகாரத்தைக் கர்த்தர் உள்ளூர் திருச்சபைகளுக்கு மட்டுமே அளித்திருக்கிறார். உள்ளூர் அல்லது ஸ்தல திருச்சபை வாழ்க்கையை அறியாதவர்கள், அதற்குத் தம்மை ஒப்புக் கொடுக்க மறுத்து வருகிறவர் கள் தங்களுடைய விசுவாசத்தை ஒருமுறை மறுபடியும் ஆராய்ந்து பார்ப்பது நல்லது. சபை வாழ்க்கையின் அவசியத்தை வலியுறுத்தும் கர்த்தருடைய தெளிவான வார்த்தைகளை நிராகரித்து வாழும் ஒருவன் தன்னைக் கர்த்தருக்கு விசுவாசமுள்ளவனாகக் கருதமுடியாது.

அத்தோடு வினாவிடை, வெளிப்புற கிருபையின் சாதனங்களை நாம் மிகுந்த அக்கறையோடு பயன்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்து கிறது. அதன்படி நாம் வெளிப்புற கிருபையின் சாதனங்களை (திரு முழுக்கு, திருவிருந்து, பிரசங்கம் கேட்டல், ஜெபம், சபை மக்களுடன் ஐக்கியம், சபை ஒழுங்குக்கு கட்டுப்படுதல் போன்றவை) அலட்சியப் படுத்தி அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் கர்த்தருடைய ஆசீர்வாதத்தை நம்முடைய வாழ்க்கையில் காண முடியாது. இதன் காரணமாகவே வேதம் நம்மைப் பார்த்து, “சபைகூடிவருதலை சிலர் விட்டுவிடுவதுபோல நாமும் விட்டுவிடாமல்” இருப்போம் என்று எச்சரிக்கிறது (எபிரேயர் 10:25). இந்த எச்சரிக்கையை இன்று நாம் காது கொடுத்து கேட்டுணர்வது அவசியம். தமிழினத்தில் பலர் இன்றைக்கு கர்த்தருடைய ஆசீர்வாதம் தேவை என்று அங்குமிங்கும் அலைந்து விசேஷமான நபர்களை நாடி ஓடுவதை வழக்கமாகக் கொண்டிருக் கிறார்கள். வாரத்துக்கொரு புதிய மனிதனிடம் ஏதாவது புதிய செய்தி

யும், ஆசீர்வாதமும் தங்களுக்கு ஆத்ம விருத்தி அளிக்கக் கிடைக்குமா என்று அலைந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் முக்கால்வாசிப் பேர் எந்த சபைகளிலும் நிலையாக இருப்பதில்லை. இப்படி அலைந்து திரிகின்ற இவர்கள் ரோமர் 10:27ன்படி சாதாரணமாக இரட்சிப்பை அளிப்பதற்கு கர்த்தர் பயன்படுத்துகிற, சபைகளில் கொடுக்கப்படுகின்ற பிரசங்க ஊழியத்தை அலட்சியப்படுத்துகிறார்கள். விசேஷமான ஆசீர் வாதங்களுக்கு அலையும் இவர்கள் திருநியமங்களையும், கிருபையின் சாதனங்களையும் சபைகளில் பெற்றுக்கொள்ளாததோடு தங்களுடைய சொந்த வாழ்க்கையில் கூட வேதத்தை வாசித்து ஜெபிப்பதில்லை.

இந்த வினாவிடை, கர்த்தருடைய ஆசீர்வாதம் சில விசேஷடமான மனிதர்களின் செய்திகளிலோ அல்லது நடைமுறைக்கு மாறான அசாதர ணமான நடவடிக்கைகளிலும் தங்கியிருக்கவில்லையென்றும், கிருபை யின் சாதனங்களின் மூலமாகவே சாதாரணமாக ஆத்துமாக்களுக்கு அளிக்கப்படுவதாகவும் விளக்குகிறது. இதனால்தான் வேதபூர்வமாக ஆத்மீக காரியங்களைச் செய்ய முயலும் சீர்திருத்த சபைகளிலெல்லாம், இயேசுவை விசுவாசித்து சபை அங்கத்தவர்களாக வரவிரும்புகிறவர் களிடமெல்லாம், “நீங்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தமாக வைத்து ஆரா தனையில் விசுவாசத்துடன் கலந்துகொள்ள உங்களை ஒப்புக்கொடுப்பீர் களா?” என்று கேட்பார்கள். அப்படி சபையோடு தங்களை இணைத்துக் கொண்டு வெளிப்புறக் கிருபையின் சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ளாதவர்கள் வாழ்க்கையில் ஆத்துமவிருத்தி அடைய முடியாது.

வெளிப்புற கிருபையின் சாதனங்களை நாம் சடங்குபோல் பயன் படுத்திவிடக்கூடாது என்பதையும் இந்த வினாவிடை வற்புறுத்துகிறது. பரிசுத்த ஆவியில் தங்கியிருந்து, விசுவாசத்துடன் அவற்றைப் பயன் படுத்துகிறபோதே அவற்றின் பலாபலன்களை நாம் அடைய முடியும். அவற்றை சரியான முறையில் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எதிர்பார்ப்போடு சபைக்கு வந்து ஜெப சிந்தையோடு ஆராதனையில் கலந்துகொண்டு, ஆர்வத்தோடும், ஆத்தும தாகத்தோடும் பிரசங்கத்தைக் கேட்டு, தேவபயத்தோடும், மெய்யான மனந்திரும்புதலோடும், ஆவிக் குரிய ஆனந்தத்துடனும் திருவிருந்தில் கலந்துகொண்டு, அன்போடு ஆத்துமாக்களுடன் ஐக்கியத்தில் வரும்படி வேதம் வலியுறுத்துகிறது. ஒருவரில் உள்ளார்ந்த கிருபை இருக்கும்போதே வெளிப்புற கிருபை யின் சாதனங்களின் பயன்களை அவரால் அடைய முடியும். இரண்டுக் கும் பிரிக்க முடியாத தொடர்பிருக்கின்றது. பேதுரு சொல்லுகிறார், “ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளு தலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்.” (2 பேதுரு 1:1–11).

# ரோம சபையும், சீர்திருத்த கவுன்சில்களும்

போப்பின் அதிகாரத்திற்கெதிரான முயற்சிகள் தொடர்ந்து அதிகரித்து வந்ததை **1409–1449** வரை உருவாகிய மூன்று சீர்திருத்த கவுன்சில்கள் சுட்டிக்காட்டுகின்றன. கத்தோலிக்க சபை அங்கத்தவர்களனைவரதும் பிரதிநிதிகளைக் கொண்டதாகவும், போப்பின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தி, அவசியமானால் போப்பை நியாயந்தீர்த்து பதவியில் இருந்து நீக்கும் அதிகாரத்தைக் கொண்டதாகவும் இருக்கும் வகையில் இந்தக் கவுன்சில் அமைக்கப்பட்டது. கத்தோலிக்க மத சீர்திருத்தத்தை நாடிய முதலாவது கவுன்சில் **1409**ல் பீசாவில் (Pisa) உருவானது. இந்தக் கவுன்சில் ஒருவருக்கொருவர் எதிர் முனையில் இருந்து செயல்பட்டு வந்த போப்புக்களான 12ம் கிரெகரியையும், 13ம் பெனடிக்டையும் கலகக்காரர்கள், சத்திய விரோதிகள், பொய்யர்கள் என்று குற்றஞ்சாட்டி பதவி நீக்கம் செய்தது. அத்தோடு, அவர்களுடைய இடத்தில் 5ம் அலெக்சாண்டரை (Alexander III) போப்பாகவும் நியமித்தது. இவ்வாறு ஆரம்பித்த சீர்திருத்தத்தைக் கவன்சில் தொடர முற்பட்டபோது புதிதாக நியமிக்கப்பட்ட போப் தன்னுடைய அதிகாரங்களுக்கு ஆபத்து வந்துவிடும் என்ற பயத்தில் தனக்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கவுன்சிலை உடனடியாகக் கலைத்து விட்டார்.

இரண்டாவது கவுன்சில் **1414–1418** வரை கொன்ஸ்டன்ஸ் (Constance) என்ற இடத்தில் கூடியது. இந்தக் கவுன்சிலே ஜோன் ஹஸ்சுக்கு (John Huss) மரண தண்டனை விதித்து தீர்ப்பளிதத்தது. அத்தோடு, ஜோன் விக்கிளிப் இறந்து நாற்பது வருடங்களுக்குப் பிறகு அவர் புதைக்கப்பட்டிருந்த இடத்தைத் தோண்டி எழும்புகளை வெளியே எடுத்து மறுபடியும் அவற்றைப் புதைக்க அனுமதி தர மறுத்தது. அந்தளவுக்கு விக்கிளிப்பின் மீது ரோமன் கத்தோலிக்க சபைக்கு ஆத்திரம் இருந்தது. இந்தக் கவுன்சிலே முறைகேடான நடத்தையைக் கொண்டிருந்தார் என்று குற்றஞ் சாட்டி போப் 23ம் ஜோனைப் (Pope John XXIII) பதவியில் இருந்து இராஜினாமா செய்யும்படி வற்புறுத்தி அவருடைய இடத்தில் 5ம் மார்டின் (Martin V) என்ற பெயரில் கார்டினல் கொலன்னாவை (Cardinal Colanna) நியமித்தது. இந்தக் கவுன்சிலும் எதிர் போப்புக்களாக இருந்த 12ம் கிரெகரியையும் (Gregory XII), 13ம் பெனடிக்டையும் (Benedict XIII) பதவி நீக்கம் செய்தது. 13ம் பெனடிக்ட் கவுன்சிலின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள மறுத்து **1424**ல் தான் இறக்கும்வரை தானே

சட்டப்படி போப் என்று கூறி வந்தார். 12ம் கிரெகரி கவுன்சில் கூடிய காலத்தில் மரணமடைந்தார். எந்தவிதமான நிலையான சீர்திருத்தத்தை யும் இந்தக் கவுன்சிலால் ரோம சபையில் கொண்டுவர முடியவில்லை. கிறிஸ்துவிடம் இருந்து நேரடியாகப் பெற்றுக்கொண்ட அதிகாரத்தைத் தான் கொண்டிருப்பதாகவும் போப் பின் மீதும் சபை அங்கத்தவர்கள் மீதும் தனக்கே அதிகாரம் இருப்பதாகவும் கவுன்சில் அறிவித்துக் கொண்டது.

மூன்றாவது கவுன்சில் 1431ல் பேசல் (Basel) நகரில் கூடியது. இது பொகீமியாவில் ஹஸ்சைச் சார்ந்தவர்களினால் ரோம சபைக்கு எதி ராக எழுந்த எதிர்ப்பை எதிர்நோக்கக் கூடியது. கவுன்சில் கூடுவதைப் போப் தடைசெய்யப் பார்த்தபோதும் சபை அங்கத்தவர்கள் போப்பை விட கவுன்சிலுக்கே அதிகாரம் அதிகம் என்று கூறி போப்பின் வார்த் தைக்கு உடன்பட மறுத்துவிட்டார்கள். ஆனால், காலஞ் செல்லச் செல்ல கவுன்சிலின் மதிப்பு குறைவடைய 1449ல் போரரசன் 3ம் பிரெடிரிக் (Fredrick III) அதைக் கலைத்து விட்டார்.

இந்த மூன்று கவுன்சில்களும் ரோமன் கத்தோலிக்க சபையில் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதில் வெற்றிபெறாத போதிலும், அதில் சீர்த்திருத்தம் அவசியம் என்ற உணர்வை ஏற்படுத்தியிருந்தன. ரோம சபையை பிடித்திருந்த வியாதி அவர்கள் நினைத்திருந்ததைவிட மோச மானதாக இருந்தது. இதற்குப் பின்பு வந்தவர்களும் கத்தோலிக்க சபை யில் சீர்திருத்தம் தேவை என்று பல முயற்சிகளை எடுத்தபோதும் போப்பின் அதிகாரத்தை வேரோடு பிடுங்கி எறியும் அளவுக்கு மார்டின் லூதர் செயல்பட ஆரம்பித்தவரையும் எவரும் எதையும் பெரிதாக செய்ய முடியவில்லை.

## ஒரு முறை திரும்பிப் பார்ப்போம்

இதுவரை முதலாம் நூற்றாண்டில் ஆதிசபை அப்போஸ்தலர்களால் அமைக்கப்பட்டு, அதற்குப் பிறகு சபைப் பிதாக்களினால் அது வழிநடத் தப்பட்டு, காலஞ் செல்லச் செல்ல சபையை வழிநடத்தியவர்கள் சத்தி யத்தைவிட்டு விலக ஆரம்பித்தபோது திருச்சபை எவ்வாறு வேதத்தைப் பின்பற்றாமல் உலக நடைமுறைகளைப் பின்பற்றி நடக்க ஆரம்பித்தது என்று பார்த்தோம். அதன் பிறகே கிறிஸ்துவின் பிரதிநிதியாக தன்னைக் கருதிய போப்பின் பதவி உருவாகி, போப் கிரெகரியின் காலத்திலிருந்து ஆதியில் வேத அடிப்படையில் இயங்கி வந்த திருச்சபை எவ்வாறு ரோமன் கத்தோலிக்க மதமாக படிப்படியாக மாறியது என்பதையும் பார்த்தோம். போப்புக்களினதும், அரசுகளினதும் அதிகாரத்துக்கு உட் பட்டதாக, வேதத்தை நிராகரித்த அமைப்பாக ரோமன் கத்தோலிக்க சபை உருவாகியிருந்தது. மேலே நாம் பார்த்த கவுன்சில் சீர்திருத்தங்கள் இந்த ரோமன் கத்தோலிக்க அமைப்பை சீர்திருத்த எடுத்த முயற்சி களாக இருந்தன. இந்தக் கவுன்சில்கள் போப்பின் அதிகாரத்தை மட்டுப்

படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டனவேயல்லாது போலித்தனமான மதச் சடங்குகளையும், போதனைகளையும் அடிமட்டத்திலிருந்து மாற்றும் முயற்சிகளில் ஈடுபடவில்லை. சபை வரலாற்றில் ஏற்பட்ட மெய்யான சீர்திருத்தத்தை இனித்தான் நாம் பார்க்கப் போகிறோம்.

இந்தப் 15ம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் கர்த்தர் அற்புதமாக தனிப் பட்ட நபர்களில் தன் ஆவியின் மூலமாக கிரியை செய்தார். மெய்யான விசுவாசிகளின் தொகை இக்காலத்தில் குறைவாக இருந்தது. வேதத்தை தங்களுடைய மொழியில் மக்கள் வாசிக்க முடியாத நிலையை போப்புக் களும், ரோமன் கத்தோலிக்க அமைப்பும் ஏற்படுத்தி வைத்திருந்தன. அரச அதிகாரமும், ரோமன் கத்தோலிக்க அமைப்பும் இணைந்து செயல் பட்டதால் மக்கள் வேதத்தை வாசித்து, சிந்தித்து செயல்படவும், கர்த்தரின் வழிப்படி ஆராதிக்கவும் சுதந்திரம் இருக்கவில்லை. இக்காலத் தில் மெய்சபை உலகில் உண்டா? என்று கேட்கும் அளவுக்கு போலிச் சபை வியாபித்து மக்களை இருட்டில் வைத்திருந்தது. சத்தியத்திற்காக போராட ஆரம்பித்த ஜோன் விக்கிளிப், ஜோன் ஹஸ் போன்றோர் அரச ஆதரவுடன் செயல்பட்ட கத்தோலிக்க மதத்தால் வேட்டையாடப் பட்டு கொடுமைப்படுத்தப்பட்டனர், சிலர் கொலை செய்யப்பட்டனர். கத்தோலிக்க மதத்திற்கும், அதன் போதனைகளுக்கும் எதிரான எந்த முயற்சியும் ராஜதுரோகமாகக் கணிக்கப்பட்டு தண்டனைக்குள்ளானது.

இத்தகைய சூழ்நிலையில்தான் இந்த நிலை மாறி மெய்க் கிறிஸ்தவ வாழ்க்கை வாழவும், வேத அடிப்படையிலான ஆராதனையில் ஈடுபட வும் வேண்டும் என்று ஆர்வம் காட்டியவர்களை கர்த்தர் எழச் செய் தார். அவர்கள் போப்புக்கு எதிராகவும், போப்பை ஆதரித்த அரசுக்கு எதிராகவும் சீர்திருத்தத்தில் ஈடுபட்டனர். சீர்திருத்தம் என்பது கத்தோ லிக்க மதத்தால் வாசிக்க முடியாதபடி தடைசெய்யப்பட்டிருந்த வேத த்தை வாசித்து கர்த்தரை அறிந்துகொள்ள தனிநபர்கள் எடுத்த முயற்சி. பாவத்திற்கு பரிகாரம் தேடியும், மெய்யான மனந்திரும்புதலையும், இரட் சிப்பையும் நாடி அவர்கள் எடுத்த நடவடிக்கைகளே சீர்திருத்தம் என்கி றது சபை வரலாறு. கர்த்தரின் வழிகளைப் பின்பற்றி அவரை ஆராதிக்க வும், பரிசுத்த வாழ்க்கை வாழவும், சபை அமைக்கவும் அவர்கள் எடுத்த முயற்சியே அது. அத்தகைய முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டபோது போப்பும், கத்தோலிக்க மதமும், அரசும் அவர்களை அழிக்கும் முயற்சி யில் ஈடுபட்டன. சபை சீர்த்திருத்தம் என்பது மெய்யான கிறிஸ்தவத்தை உலகத்தில் மறுபடியும் ஏற்படுத்துவதற்காக கர்த்தர் ஆரம்பித்த ஆத்மீக செயல். இதுவே பின்பு மார்டின் லூதரின் மூலம் பெரீயக்கமாக உரு வாகி ரோமன் கத்தோலிக்க மதத்தின் வீழ்ச்சிக்கும், மறுபடியும் மெய்ச் சபைகள் தோன்றவும் காரணமாக அமைந்தன.

16ம் நூற்றாண்டில் சபை சீர்திருத்தம் ஆரம்பித்து இன்று கிறிஸ்தவ சபைகள் உலகெங்கும் வியாபித்து கர்த்தரை ஆராதித்து, ஊழியத்தில்

ஈடுபட்டு வந்தபோதும், பல் பிடுங்கப்பட்ட பாம்பாக, அதிகாரத்தை இழந்து இருந்து வரும் ரோமன் கத்தோலிக்க மதம் தொடர்ந்தும் தன்னைத் தாய்ச் சபையாக தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறது. உண்மையில் "சபை" என்ற பதத்தை அது பயன்படுத்த வேதம் அனுமதிக்கவில்லை. மெய்யான விசுவாசமுள்ள ஆத்துமாக்களைக் கொண்டமைந்த சபைகள் மட்டுமே மெய்ச்சபைகள். அது ரோமன் கத்தோலிக்க மதத்திற்குப் பொருந்தாது. வேதபூர்வமான கிறிஸ்தவ திருச்சபைகள் சில்லறைத்தனமான காரியங்களுக்காக முரண்பட்டுத் தன்னைவிட்டு விலகிப் போனதாகவும், திரும்பவும் ஒருநாள் மீண்டும் அவை தன்னோடு இணைந்து கொள்ளும் என்ற கனவுலகில் கத்தோலிக்க மதம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. கிறிஸ்தவ சபைகளைத் தன்னோடு இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளிலும் அது தொடர்ந்து ஈடுபடத் தவறவில்லை.

இந்தியாவில் சமய சமரசம் (Ecumenism) என்ற பெயரில் சத்தியத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, தென்னிந்திய திருச்சபையும் (Church of South India), ஆங்கிலிக்கன் சபைகளும் (Anglican Churches), மெத்தடிஸ்ட் சபைகளும் (Methodist Churches), பிரெஸ்பிடீரியன் சபைகளும் (Presbyterian Churches), கொங்கிரிகேஷனல் சபைகளும் (Congregational Churches) இணைந்து ஒரே அமைப்பாக 1947ல் நாடு சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்தே இயங்கி வருகின்றன. இவை United or Uniting Churches of India என்ற பெயரில் இயங்கி வருகின்றன. அது மட்டுமல்லாமல் இந்த அமைப்பு ரோமன் கத்தோலிக்க மதத்துடன் ஒத்துழைப்பதற்கான வழிவகைகளை நாடி ஏற்கனவே பலதடவைகள் உலக அளவில் சமய சமரசக் கூட்டங்களை நடத்தியுள்ளது; தொடர்ந்து நடத்திக் கொண்டும் வருகின்றது. திருச்சபை வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றிய அறிவு இல்லாமல், கத்தோலிக்க மதத்துக்கும், சீர்திருத்தவாதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட பிரிவுக்கு இறையியல் போதனைகள் ஒரு காரணமல்ல என்று அறிவித்து, இந்த சமய சமரசக் கலந்துரையாடல்கள் 1992ல் இருந்து நடந்து வருகின்றன. இதேவிதமான சமய சமரச கூட்டங்களை பெந்தகொஸ்தே இயக்கத்தோடும் இந்த அமைப்பு நடத்தியுள்ளது. சத்தியத்தை ஏற்கனவே உதறித் தள்ளிவிட்ட இந்த சமயசமரச சபைகள் அனைத்தும் ரோமன் கத்தோலிக்க சபையுடன் இணையப் போகும் காலம் வெகு தூரத்தில் இல்லை. இந்த முறையிலேயே 15ம் நூற்றாண்டிற்கு முன்பு ரோமன் கத்தோலிக்க மதம் தன்னை வளர்த்து பலப்படுத்திக் கொண்டதை நாம் ஏற்கனவே வரலாற்றில் பார்த்திருக்கிறோம்.


## ஆடியோ, விசிடியில் சீர்திருத்த பிரசங்கங்கள்

**சீர்திருத்த பிரசங்கங்களைக் கேட்க விரும்புகிறவர்கள் ஆடியோ மற்றும் விசிடி கெசட்டுகளுக்கு எண் 22. டி. பி. கே. மெயின் வீதி, பைகாரா, மதுரை 4 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.**

# பிரசங்கமும், பரிசுத்த ஆவியும்

வேத அடிப்படையில் பிரசங்கத்தைத் தயாரித்துப் பிரசங்கிப்ப தற்கு அவசியமான அம்சங்களில் கவனம் செலுத்திப் பிரசங்கம் பிரசங்கமாக இருக்குமாறு பார்த்துக் கொள்வது எப்படி என்று இதுவரை பார்த்திருக்கிறோம். இத்தோடு பிரசங்கம் குறித்த சகல அம்சங்களையும் ஆராய்ந்து முடித்துவிட்டோம் என்று எண்ணிவிடக்கூடாது. நமது பிரசங்க ஊழியம், கர்த்தரை மகிமைப்படுத்தும்படியாக, அவற்றின் நோக்கங்கள் நிறைவேற வேண்டு மானால் நம்முடைய உழைப்பையும் மீறிய பரிசுத்த ஆவியானவரின் அனுக்கிரகமும், வல்லமையும் அவசியம். அதாவது, நமது படிப்பையும், திறமைகளையும், உழைப்பையும் மீறிய கர்த்தரின் கிரியை அவசியம். மனிதனின் வேறு எந்தவிதமான மேடைப் பேச்சுக்கும், விரிவுரை களுக்கும் அவசியமில்லாத கர்த்தரின் விஷேச ஆசீர்வாதம் பிரசங்கம் மனிதர்களுக்குப் பயனுள்ளதாக அமைய அவசியமாகிறது. அதைத்தான் நாம் பரிசுத்த ஆவியின் அனுக்கிரகம் என்று அழைக்கிறோம். இது பரிசுத்த ஆவியானவர் பிரசங்கியிலும், பிரசங்கத்தின் மூலம் ஆத்துமாக் களின் இருதயங்களிலும் செய்கின்ற கிரியையாகும்.

பரிசுத்த ஆவியானவர் திரித்துவத்தின் மூன்றாம் ஆள்தத்துவம். அவர் தேவன், கர்த்தர். இராஜாவாகிய இயேசு கிறிஸ்துவின் ஆளுகை சகல இடங்களிலும் தொடர பரிசுத்த ஆவியானவர் அவருடைய பிரதிநிதி யாக உலகில் செயல்பட்டு வருகிறார். தான் போதித்த அனைத்தையும் அப்போஸ்தலர்கள் நினைவுகூறும்படி ஆவியானவர் அவர்களுக்கு உதவு வார் என்று இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் திருச்சபை இந்த உலகில் நிறுவப்பட்ட காலமுதல் ஆவியானவர் சுவி சேஷம் சகல தேசங்களிலும், சகல குல மக்கள் மத்தியிலும் பரவி சபை கள் நிறுவ கிரியை செய்து வருகிறார். ஆவியானவருடைய கிரியையில்லா மல் சுவிசேஷம் பரவ முடியாது. திருச்சபைகள் நிறுவப்பட முடியாது.

பிரசங்கத்துக்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் இடையில் உள்ள தொடர்பை ஓரளவுக்கு கிறிஸ்தவர்களில் பலரும் அறிந்து வைத்திருந் தாலும், அவர்களுடைய எண்ணங்கள் வேத அடிப்படையில் அமைந் திருப்பதில்லை. பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் இயக்கங்களால் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய தவறான போதனைகள் இன்று சர்வ சாதாரணமாக தமிழினத்தின் மத்தியில் உலவி வருகின்றன. ஆகவே, பிரசங்கத்துக்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் இடையில் உள்ள தொடர்பைப் பற்றி நாம் ஆராய்கிறபோது கவனத்தோடு அதை அணுகு வது அவசியமாகிறது.

*கர்த்தரின் செய்தியை அவருடைய ஊழியக்காரர்கள் பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி பரிசுத்த ஆவியானவருடைய துணையோடேயே அறிவித்திருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள் ஆவியின் வல்லமையினாலேயே கர்த்தரின் செய்தியை இஸ்ரவேலருக்கு அறிவித்தார்கள். எசேக்கியல் 2:1–2ல், "அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, உன் காலூன்றி நில்; உன்னுடனே பேசுவேன் என்றார். இப்படி அவர் என்னோடே பேசும்போது, ஆவி எனக்குள் வந்து, என்னைக் காலூன்றி நிற்கும்படி செய்தது; அப்பொழுது அவர் என்னோடே பேசுகிறதைக் கேட்டேன்" என்றிருக்கிறது. எசேக்கியல் யூதாவுக்கு கர்த்தரின் வார்த்தையைப் பிரசங்கிக்குமுன் அந்த வார்த்தையைப் பெற்றுக்கொள்ள ஆவியானவர் அவரில் கிரியை செய்திருப்பதை இந்த வசனம் உணர்த்துகிறது. இது எசேக்கியல் மட்டுமல்லாமல் சகல தீர்க்கதரிசிகளும் பழைய ஏற்பாட்டில் பெற்றிருந்த அனுபவமாகும். புதிய ஏற்பாட்டிலும் அதேவிதமாகவே கர்த்தரின் செய்தியை அப்போஸ்தலர்களும், அவருக்குப்பின் வந்தவர்களும் அறிவித்திருக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் கர்த்தரின் வார்த்தையைப் பிரசங்கித்தபோது அவர்களுக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. அவர்கள் தங்களுடைய சபைக்குத் திரும்பி சபையாக ஜெபித்து பிரசங்க ஊழியத்திற்காக கர்த்தரின் துணையை நாடியபோது பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக அவர்களுக்கு உதவினார் என்றும் அவர்கள் ஆவியின் வல்லமையுடன் வசனத்தைப் பிரசங்கித்தார்கள் என்றும் அப்போஸ்தலர் 4:1–31 வரையுள்ள வசனங்களில் வாசிக்கிறோம்.*

*பிரசங்கத்தோடு தொடர்புடைய இந்த ஆவியின் கிரியை நாம் வேதரீதியில் அறிந்து வைத்திருப்பது அவசியம். இதை நமது சீர்திருத்த வாத பெரியவர்கள்* "Unction of the Spirit" *என்று அழைத்தார்கள். இதை அவர்கள் வேதப் பிரசங்கத்தோடு தொடர்புடையதும், வேதப் பிரசங்கத்துக்கு அவசியமானதுமான அனுபவமாகக் கருதினார்கள். பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் இயக்கங்களின் பரிசுத்த ஆவியானவர் பற்றிய தவறான போதனைகளுக்கும் நாம் விளக்கப்போகும் பிரசங்க ஊழியத்துக்கு அவசியமான ஆவியானவரின் அனுபவத்திற்கும் பெரிய இடைவெளி இருக்கிறது. இன்று பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் இயக்கங்கள் "அபிஷேகம்" என்ற பெயரில் அழைக்கும் போலித்தனமான அனுபவமல்ல இது. ஆகவே, நாம் பெந்தகொஸ்தேகாரர்களைப் போல ஆவியானவரைப் பற்றி பேச ஆரம்பித்துவிட்டோம் என்று யாரும் தப்புக் கணக்கு போட்டு விடக்கூடாது. பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பிரசங்கத்தைப் பிரசங்கத்திற்குரிய இலக்கணங்களோடு, கடின உழைப்போடு வேதபூர்வமாக தயார் செய்யாமல் பிரசங்க வேளையில் மட்டும் பரிசுத்த ஆவியானவரின் கிரியை நாடி வருகிறார்கள். வேத அடிப்படையில், இறையியல்பூர்வமாக தயாரிக்கப் படாத எந்தப் பிரசங்கத்தையும் பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்துவதில்லை என்பதை அவர்கள் உணர்வதில்லை. அத்தோடு, அவர்கள்*

*பிரசங்கத்தின் அவசியம் இல்லாமலேயே பரிசுத்த ஆவியானவர் ஆத்து மாக்களில் கிரியை செய்து அவர்களுக்கு இரட்சிப்பைத் தருவார் என்று தவறாக நம்பி வருகிறார்கள்.*

## பிரசங்கத் தயாரிப்பில் பரிசுத்த ஆவியின் கிரியை

*தங்களுடைய பிரசங்க ஊழியத்தில் பரிசுத்த ஆவியின் கிரியையைப் பார்க்க வேண்டுமானால் பிரசங்கிகள் தங்களுடைய ஊழியக்காலம் முழுவதும் பரிசுத்த ஆவியில் தங்கியிருக்க வேண்டும். விசுவாசியாக பரிசுத்த ஆவியின் இடைப்படுதலை தன் வாழ்வில் அன்றாடம் அறிந் திருந்து பரிசுத்தத்தில் வளர்ந்து வராதவர்கள் பிரசங்க ஊழியத்தையும் போதக ஊழியத்தையும் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தோடு செய்ய முடியாது.*

*பிரசங்கிகள் பிரசங்கிக்கும்போது ஆவியானவர் அவர்களில் செய்யும் கிரியையையும், பிரசங்கத்தைக் கவனமாக தயாரிக்க வேண்டிய அவர் களுடைய கடமையையும் நாம் பிரித்துப் பார்க்கக்கூடாது என்று கர்த்த ரால் ஆசீர்வதிக்கப்பட்ட பிரசங்கியான மார்டின் லொயிட் ஜோன்ஸ் கூறியிருக்கிறார். அவர் கூறியது உண்மைதான். இவற்றில் ஒன்றில்லாமல் மற்றதை நாம் எதிர்பார்ப்பது முட்டாள்தனம். அநேகர் பிரசங்கத்தை தயாரிக்க வேண்டிய விதத்தில் உழைத்துத் தயாரிக்காமல் பரிசுத்த ஆவி யின் கிரியை மட்டும் பிரசங்க வேளையில் நாடி வருகிறார்கள். அது மிகவும் தவறான செயல். வேறு சிலர் பிரசங்கத்தை மட்டும் இறையியல் பூர்வமாக நல்லமுறையில் தயாரித்துவிட்டு பிரசங்க வேளையில் ஆவியின் துணையை நாடி வருவதில்லை. இதுவும் தவறான செயல். இந்த இரண்டும் அவசியம்; இரண்டும் இல்லாத எதையும் கர்த்தர் ஒரு போதும் பயன்படுத்துவதில்லை.*

*பிரசங்கத்தைத் தயாரிக்க ஆரம்பிக்கும் நேரத்திலிருந்து அதைப் பிரசங்கித்து முடியும்வரை பிரசங்கி ஜெபத்தோடு பரிசுத்த ஆவியில் தங்கியிருப்பது அவசியம். பிரசங்க நேரத்தில் மட்டும் திடீரென பரிசுத்த ஆவியானவர் இடைப்பட்டு பிரசங்கத்தை ஆசீர்வதிப்பார் என்று எண் ணுவது வெறும் கனவு. பிரசங்கப் பகுதியை விளங்கிக் கொள்ளுவதற்கு நாம் பரிசுத்த ஆவியில் தங்கியிருக்க வேண்டும். வசனத்தை நாம் விளங்கிக் கொள்ளத் துணை செய்கிறவர் பரிசுத்த ஆவியானவரே (லூக்கா 10:21; 11:13; யோவான் 14:26). பிரசங்கிப்பதற்காக எடுத்துக் கொண்ட வசனங்களைப் பிரித்து ஆராய்ந்து, அதில் தரப்பட்டுள்ள போதனைகளுக்கேற்ப பிரசங்கத்தை இறையியல் போதனைகளையும், உதாரணங்களையும், நடைமுறைப் பயன்பாடுகளையும் கொண்டு தயாரிப்பதற்கு ஆரம்ப முதல் இறுதிவரை நமக்கு பரிசுத்த ஆவியின் துணை தேவைப்படுகிறது. வேத அடிப்படையில் பிரசங்கத்தைக் கவனத்தோடு பாடுபட்டுத் தயாரிப்பவர்களை ஆவியானவர் நிச்சயம் வழிநடத்தித் துணை செய்கிறார்.*

## பிரசங்கவேளையிலும், பிரசங்கத்தின் மூலமும் பரிசுத்த ஆவியான வர் செய்யும் கிரியை

*ஏதோ ஒரு வேத வசனத்தை எடுத்துக் கொண்டு, மாம்ச தைரியத் தோடு பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதத்தை நாடி பிரசங்கிக்கப் போகிற வர்கள் இன்று நம்மத்தியில் அதிகம். பரிசுத்த ஆவியானவர் ஊழியக் காரனுக்கு கட்டுப்பட்டவர் என்ற அசட்டுத் தைரியத்திலும், அறியாமை யிலும் ஊழியம் செய்கிறவர்களின் தொகைக்கும் அளவேயில்லை. இவர்கள் எல்லோரும் பிரசங்கத்தின் மூலம் ஆவியானவர் செய்யும் கிரியையைப் பற்றிய தவறான எண்ணங்களைக் கொண்டிருக்கிறார்கள்.*

*பிரசங்கத்தின் மூலம் பரிசுத்த ஆவியானவர் செய்யும் கிரியையைப் பற்றி விளக்குகிறபோது இரண்டு முக்கிய அம்சங்களை நாம் கருத்தில் கொண்டிருக்கிறோம்.*

### (1) பரிசுத்த ஆவியானவர் பிரசங்கியில் செய்யும் கிரியை

*பிரசங்கி பிரசங்கிக்கும் வேளையில் ஆவியானவரின் கிரியையைத் தன்னில் உணர முடியும். ஆவியின் அனுக்கிரகம் பிரசங்கியோடு இருக் கும்போது பிரசங்கத்தை ஆரம்பித்து பிரசங்கிக்கின்ற வேளையில் பிரசங்கி தன்னுடைய வார்த்தைகள் தடையில்லாமல் அருவி போலப் பாய்வதையும், மனித பயமில்லாமல் வைராக்கியத்தோடு தன்னால் பிரசங்கிக்க முடிவதையும், தன்னை மீறிய ஒரு வல்லமை தன்னைப் பயன்படுத்துவதையும் உணர முடியும். இதைத்தான்* "Unction of the Spirit" *என்று சீர்திருத்தவாத பெரியவர்கள் அழைத்தார்கள். இது மனித சக்தியாலோ, மனித ஞானத்தினாலோ நிகழும் காரியமல்ல. அப்போஸ். 4:31, அப்போஸ்தலர்கள் "தேவ வசனத்தை தைரியமாய்ச் சொன்னார் கள்" என்கிறது. "தைரியமாய்" என்ற இந்த வார்த்தையைப் பலவிதமாக விளக்கலாம். இதற்கு வெளிப்படையாய், பயமின்றி, முழு நம்பிக்கை யோடு என்று பல அர்த்தங்கள் உள்ளன. இதெல்லாம் அப்போஸ்தலர் கள் மனித சக்தியினாலல்லாமல் அவர்களுக்குப் புறத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் தந்த வல்லமையால் வார்த்தையைப் பிரசங்கித்தார்கள் என்பதை விளக்குகின்றன. பரிசுத்த ஆவியானவர் அவர்களைப் பயன் படுத்தியபோது அவர்களால் குழப்பமில்லாமல், வைராக்கியத்தோடு, மனுஷ பயமின்றி வசனத்தை வல்லமையாய் பிரசங்கிக்க முடிந்தது.*

*இந்த அனுபவத்தைப் பற்றிப் பவுல் அப்போஸ்தலன் பலதடவை விளக்கியிருக்கிறார். "எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது . . ." என்று பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதினார் (1 தெசலோ. 1:5). தொடர்ந்து 1 கொரி. 2:5ல், "என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது." என்று பவுல் விளக்குகிறார். தன் பிரசங்கம் ஆத்துமாக்களுக்குப் பயனுள்ளதாக*

*அமைய பவுல் மனுஷனுடைய ஞானத்தில் தங்கிருக்கவில்லை; இந்த உலகத்துக்குரிய கருவிகளில் தங்கியிருக்கவில்லை; வீண் வார்த்தை சாமர்த்தியத்திலும், வார்த்தை ஜாலத்திலும் தங்கியிருக்கவில்லை. அவர் ஆவியின் பெலத்தினாலேயே ஒவ்வொரு முறையும் பிரசங்கித்திருக் கிறார். "உறுதிப்பட்டதாயிருந்தது" என்ற வார்த்தையின் மூலம் ஆவியின் கிரியையின் அடையாளங்களோடு தன்னுடைய பிரசங்கம் அமைந் திருந்ததாக பவுல் கூறுவதைக் கவனிப்பது அவசியம். இன்று ஆவியின் கிரியையின் அடையாளங்களாக கூட்டத்தில் இருப்பவர்கள் பேயாட் டம் ஆடுவதையும், நிலத்தில் விழுந்து புரளுவதையும் சுட்டிக் காட்டு வார்கள். அவை ஆவியின் கிரியைகளல்ல, பிசாசின் கிரியைகளே. பவுல் சுட்டிக் காட்டும் கிரியைகள் ஆவியானவரின் பரிசுத்தமான கிரியைகள்; கர்த்தரை மகிமைப்படுத்தும் கிரியைகள். பிரசங்கியை அவர் பயன் படுத்தும் அற்புதமான கிரியைகள். இதில் அவலட்சனத்திற்கும், அசட் டுத்தனமான செயல்களுக்கும் இடமிருக்கவில்லை.*

> *"எல்லாருடைய காதுகளிலும் விழும்படியாக சுவிசேஷம் பிரசங் கிக்கப்பட்டாலும், அது சிலருடைய காதுகளில் மட்டும்தான் வல்லமையாக விழுகிறது. சுவிசேஷத்தின் வல்லமை அதைப் பிரசங்கிக்கும் பிரசங்கியின் பேச்சுத்திறத்தில் தங்கியிருக்க வில்லை; அப்படியிருந்திருந்தால் ஆத்துமாக்களின் மனந்திரும்பு தலுக்கு மனிதனல்லவா காரணமாக இருந்திருப்பான். அது பிரசங்கியின் அறிவுத்திறத்திலும் தங்கியிருக்கவில்லை; அவ்வா றிருந்திருந்தால் மனிதனின் ஞானத்தினாலல்லவா மனந்திரும்பு தல் என்றாகிவிடும். நம்முடைய நாக்கு வீணாகப் போகுமளவு க்கு நாம் பிரசங்கித்தாலும், நம்முடைய இருதயம் பலவீனமாகி, நாம் இறந்துபோகுமளவுக்கு பிரசங்கித்தாலும் நமது பிரசங்கத் தோடு ஆவியின் வல்லமையும் சேர்ந்து செயல்படாவிட்டால் ஒரு ஆத்துமாவாவது மனந்திரும்புவதற்கு வழியில்லை." என்றார் பிரசங்கிகளின் இளவரசன் என்றழைக்கப்பட்ட ஸ்பர்ஜன்.*

*பிரசங்கம் எப்போதும் வேதபூர்வமாகவும், தத்துவரீதியிலும், ஆத்து மாக்களை சிந்திக்க வைப்பதாகவும், அவர்களுக்கு அறிவூட்டுவதாகவும், இறையியல் போதனகளையளிப்பதாகவும், நடைமுறைப்பயன்பாடு களைக் கொண்டதாகவும் இருப்பது மிகவும் அவசியம் என்பதை நாம் ஏற்கனவே பலமுறை வலியுறுத்தியிருக்கிறோம். அதேவேளை அத்தனை சிறந்த அடையாளங்களைக் கொண்டுள்ள பிரசங்கத்தைப் பிரசங்கி ஆவியின் வல்லமையோடு பிரசங்கிக்காவிட்டால் அந்தப் பிரசங்கம் வெறும் ஏட்டுச்சுரைக்காயாகிவிடும். அதாவது, அது சிந்தனைக்கு மருந்து தரும்; ஆனால், ஆத்துமாவுக்கு உணவளிக்காது. இதை ஸ்பர்ஜன் மறுபடியும் பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறார்:*

> *"ஒரு பிரசங்கம் தெளிவானதாய், சரியானதாய், நல்ல கருத்துக் களைக் கொண்டதாய், காரண காரியங்களை ஆராய்ந்து சிறப்*

*பாக விளக்குவதாய், அழகுள்ளதாய், உவமை, உருவகங்களைக் கொண்டதாய், உணர்வுகளைத் தூண்டக்கூடியதாய், நல்ல பயன்பாடுகளைக் கொண்டதாய் இருந்துவிடலாம். அத்தகைய அருமையான பிரசங்கத்தை மேடைப் பிரசங்கத்தின் இளவர சனாக இருக்கும் ஒருவர் பிரசங்கித்தாலும் அது பரிசுத்த ஆவி யின் வல்லமையோடு பிரசங்கிக்கப்படாவிட்டால் மரித்தவனு க்கு உயிரளிப்பதுபோல் ஆத்துமாவின் இருதயத்தை அசைத்து மனந்திரும்பவைக்கக்கூடிய வல்லமை இல்லாததாக இருந்து விடும்."*

*பிரசங்கத்தை ஆரம்பித்தது முதல் முடியும்வரை ஒரே தோனியில் எந்தவித மாற்றமுமில்லாமல், உணர்ச்சியும் இல்லாமல் கொடுக்கப்படும் பிரசங்கம் ஆவியின் வல்லமையைக் கொண்டதல்ல. அதில் காணப் படும் செய்திகள் ஆவிக்குரியதாக இருந்தாலும் அது ஆத்துமாக்களை அசைக்கும் ஆவியின் அடையாளத்தைக் கொண்டிருக்காது. ஆவியின் வல்லமையுள்ள பிரசங்கம் அதைக் கேட்பவர்களில் இரண்டில் ஒன்றை நிச்சயம் செய்யும். ஒன்றில், அது அவர்களுடைய இருதயத்தை அசைத்து பாவத்தை உணர்த்தும் அல்லது பிரசங்கியின் மேல் அவர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தும். எவரையும் ஏதாவதொருவிதத்தில் அசைக் காத பிரசங்கம் பிரசங்கமாக இருக்க முடியாது.*

*பிரசங்கத்தில் ஆவியின் வல்லமையை உணர்ந்த பிரசங்கிகள் ரிச்சட் பெக்ஸ்டர் சொன்னது போல் "மரணத்தின் வாசலில் நிற்கும் மனிதர் களுக்கு, நான் மரணத் தருவாயில் இருக்கும் மனிதனைப் போல பிரசங்கம் செய்வேன்" என்ற வைராக்கியத்தோடு பிரசங்கிப்பார்கள். ஆவியின் வல்லமையுள்ள பிரசங்கத்தில் பிரசங்கியின் இருதயத்தைப் பார்க்க முடியும். ஆத்துமாக்கள் மனந்திரும்பி இயேசுவை விசுவாசிக்க வேண்டும் என்ற வாஞ்சையோடு, மரணத்துக்கும் வாழ்வுக்கும் இடை யில் அவர்கள் நிற்கிறார்கள் என்ற ஆணித்தரமான நம்பிக்கையோடு இயேசுவை விசுவாசிக்கும்படி அறைகூவலிடும் ஆத்துமாவைப் பார்க்க முடியும். பவுலின் பிரசங்கம் அப்படிப்பட்டதாயிருந்தது. அரசனான அக்கிரிப்பாவைப் பார்த்து பவுல், "ராஜாவே தீர்க்கதரிசிகளை விசுவா சிக்கிறீரா? விசுவாசிக்கிறீர் என்று அறிவேன்" என்று பிரசங்கித்தபோது அக்கிரிப்பா பவுலை நோக்கி, நீ தொடர்ந்து பேசினால் என்னைக் கொஞ்ச நேரத்தில் கிறிஸ்தவனாக மாற்றிவிடுவாய் என்று சொல்ல வில்லையா? (அப்போஸ். 26:27-28). அந்தளவுக்கு பவுலின் பிரசங்கம் ஆவியின் வல்லமையையும், அக்கிரிப்பா இயேசுவை விசுவாசிக்க வேண் டும் என்ற வாஞ்சையையும் கொண்டிருந்தது.*

*பிரசங்கத்தில் ஆவியின் வல்லமை இருக்கும்போது பரலோகம் இந்த உலகத்துக்கு வந்துவிடுகிறது. ஆவியின் வல்லமையோடு பிரசங்கம் இருக்கும்போது பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கும் ஆத்துமாக்கள் அலற வேண்டிய அவசியமில்லை. கூட்டத்தில் விவரிக்க முடியாத*

அமைதி காணப்படும். சிலரது முகங்களில் வடியும் கண்ணீரைக் காண லாம். கூட்ட முடிவில் ஆத்துமாக்கள் ஆவிக்குரிய சத்தியங்களில் அதிக நாட்டம் காட்டிப் பேசுவதைக் கேட்கலாம். இரட்சிப்பை எப்படிப் பெற்றுக் கொள்வது என்று துடித்துக் கேட்கிறவர்களைப் பார்க்கலாம். இதெல்லாம் பிரசங்கத்தின் மூலம் ஆவியானவர் செய்யும் கிரியைகள்.

ஆவியின் வல்லமையைப் பிரசங்கத்தில் காண மாம்ச வழியில் பிர சங்கி எதையும் செய்துவிட முடியாது. அதற்காக ஜெபிப்பதைத் தவிர வேறு வழியில்லை. நேர்மையான, கடின உழைப்பும், விசுவாசமுள்ள ஜெபமும் மட்டுந்தான் நமது பிரசங்கங்களில் ஆவியின் வல்லமையைக் காண உதவி செய்யும். ஆவியானவரை நாம் கட்டுப்படுத்திக் காரியம் சாதிக்க முடியாது என்று ஏற்கனவே பார்த்தோம். விசுவாசமுள்ள ஜெபத்தையும், விசுவாசமுள்ள பிரசங்கங்களையும் அவர் ஆசீர்வதிக்கத் தவறுவதில்லை. ஜோர்ஜ் விட்பீல்ட், ஜொனத்தன் எட்வர்ட்ஸ், ஜோன் பனியன், ஸ்பர்ஜன் போன்ற நமது சீர்திருத்தவாத பெரியவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியின் வல்லமையைத் தங்களுடைய பிரசங்க ஊழியத்தில் அறிந்திருந்தார்கள். இன்று தமிழினத்தின் ஆத்மீக விடு தலைக்கும், திருச்சபை சீர்திருத்தத்திற்கும் ஆவியின் வல்லமையைக் கொண்ட பிரசங்கங்களும், அத்தகைய பிரசங்கங்களை அளிக்கக்கூடிய பிரசங்கிகளும் தேவை. வேதத்தைப் படித்துப் பிரசங்கங்களைத் தயாரிக் கின்ற பிரசங்கிகள் ஆவியின் வல்லமையோடும் பிரசங்கிக்கிறவர்களாக இருக்க நாம் ஜெபிப்பது அவசியம். (மிகுதி அடுத்த இதழில்)


"இயேசுவின் குடும்பம்
இனிய குடும்பம்"

1. காதலோ காதல்!
2. ஈருடல் ஓர் மனம்!
3. பிறரது தலையீடு வேண்டாமே!

நம்மினத்தில் கிறிஸ்தவ குடும்பம் எப்படி ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று திருமண வாழ்க்கைக்கான ஆலோசனைகளைத் தரும் போதகர் பாலாவின் (நியூசிலாந்து) மூன்று செய்திகள் ஒலி, ஒளி நாடாக்களில் வெளிவந்திருக்கின்றன. திருமணமானவர்களுக்கும், திருமண வாழ்க்கைக்கு தயாராகிறவர்களுக்கும் இவை மிகுந்த பயனளிக்கும்.

பெற்றுக் கொள்ள வேண்டிய முகவரி:

இவாஞ்சலிக்கள் பாப்திஸ்து சபை
22 டி. பி. கே மெயின் வீதி, பைகாரா, மதுரை 625004

# பத்தாண்டு நிறைவு விழா நினைவுகள்!

**[பத்திரிகையின் பத்தாம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்ட திரு. ஜெயபால் அவர்கள் வரைந்தளித்த விழாபற்றிய குறிப்பு. விழாவில் எடுக்கப் பட்ட படங்களை முகவட்டையின் உட்புறத்தில் பார்க்கலாம்.]**

*2005 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 2 ம் தேதி சனிக்கிழமை அன்று மதுரை ராயல் கோர்ட் ஹோட்டலில் மாலை 7 மணியளவில் திருமறைத்தீபம் இதழின் பத்தாண்டு நிறைவு விழா கர்த்தரின் கிருபையால் இனிதாக நிகழ்ந்தது. விழா வின் தலைமைப் பொறுப்பை சிவகாசியைச் சேர்ந்த போதகர் டேவிட் ஜெபராஜ் அவர்கள் ஏற்று சிறப்பாக நடத்தினார்கள். இவ்விழாவில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் சபைப் போதகர்களும், திருமறைத்தீப வாசகர்களும் பிற சிறப்பு விருந்தினர்களும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்து தந்தார்கள். இந்நிகழ்ச்சியில் சுமார் 240 பேர் கலந்து கொண்டார்கள்.*

*விழாவில் கலந்து கொண்டவர்களை மதுரை இவாஞ்சலிக்கள் பாப்திஸ்து சபைப் போதகர் ஸ்டீபன்சன் வரவேற்றுப் பேசினார்கள். அதைத் தொடர்ந்து திரு. ஜெயபால் அவர்கள் திருமறைத்தீபம் ஆரம்பிக்கப்பட்டதின் நோக்கம் பற்றியும், ஆசிரியர் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் செய்யப்படும் ஊழியப்பணி பற்றியும், பத்திரிகையின் தன்மை குறித்தும் விளக்கிப் பேசினார்.*

*இவ்விழாவில் 10-ம் ஆண்டு நிறைவு திருமறைத்தீபம் இதழின் முதல் பிரதியை போதகர் டேவிட் இளங்கோவனிடம் இருந்து திரு. அருள்செல்வம் பெற்றுக்கொண்டார். இந்தியன் பாங்கில் பணிபுரியம் திரு. அருள்செல்வம் அவர்கள் ஆரம்ப காலத்தில் இருந்து பத்திரிகையின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டி வருகிறவர். பெயரையும், பெருமையையும் நாடாமல் அமைதியாகத் தள்ளி நின்று பத்திரிகையின் நலத்திலும், அதில் வெளிவரும் சத்தியங்களிலும் அடங்காத ஆர்வம் காட்டும் இந்த அன்புச் சகோதரர் 10-ம் ஆண்டு நிறைவு மலரின் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டது விழாவுக்கு பெருமை சேர்த்தது.*

*விழாவில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்களில் சிலர் கீழ்வரும் எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டார்கள்:*

*“பொருளாதார செழிப்பையும், ஆசிர்வாதங்களையும் முதன்மைப்படுத்தி வெளிவரும் தமிழ் பத்திரிகைகளை மட்டுமே இன்றுவரை தமிழுலகம் கண் டுள்ளது. இதிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு இதழாக திருமறைத்தீபம் உள்ளது பாராட்டிற்குரியது. கிறிஸ்தவ இலக்கியத் துறையில் தரமான செய்தி களைக் கொண்டு சந்தா இல்லாத புத்தகமாக தொடர்ந்து வெளிவருவது மிக்க மகிழ்ச்சியளிக்கிறது. தமிழர்களான நாம் அடுத்த மாநிலத்துக்குப் போன*

வுடனேயே தமிழை மறந்து விடுகிறோம். அப்படியிருக்கும்போது நியூசிலாந்து நாட்டில் இருந்து பத்திரிகை தமிழில் நமக்குதவ வெளிவருவது ஆச்சரியம். என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கைக்கும், ஊழியங்களுக்கும் பத்திரிகை மிகவும் துணையாக இருந்து வருகின்றது.'' - **போதகர் டேவிட் ஜெபராஜ், சிவகாசி**

“திருமறைத்தீபம் இதழானது மிகவும் தரம் வாய்ந்த தாளில் அச்சிடப்பட்டு வெளிவருவதால் நீண்ட நாட்கள் வைத்து படிக்க உதவும் வகையில் உள்ளது. சிலர் பத்திரிகை மாதா மாதம் வரவேண்டுமென்று விரும்புவார்கள். காலாண் டுக்கு ஒருமுறை வெளிவருவதை நான் மிகவும் வரவேற்கிறேன். காரணம், தகுந்த இடைவெளி இருப்பதால் இதழில் வெளிவரும் ஆழமான செய்தி களைப் படித்து நினைவுபடுத்திக்கொள்ளுவதற்கு வசதியாக இருக்கிறது. திருமறைத்தீபம் இதழின் அளவானது சிறியதாகவும் கைக்கு அடக்கமாகவும் இருப்பதால் எல்லா இடங்களுக்கும் எளிதாக எடுத்துச் செல்ல வசதியாக உள்ளது. பத்திரிகையின் எழுத்து நடை, வார்த்தைப் பிரயோகங்கள் அருமை. அநேக வார்த்தைகளை நானே முதன்முறையாகக் கற்றுக்கொண்டதோடு பயன்படுத்தியும் வருகிறேன்.” - **போதகர் பால்ராஜ், பழனி**

“திருமறைத்தீப இதழ் ஆவிக்குரிய வாழ்க்கையின் சகல அம்சங்களையும் தொட்டு சரியான போதனைகளைத் தந்து வருகின்றது. சபை சரித்திரத்தில் சீர்திருத்தவாதிகள் எழுதிப் பின்பற்றிய 1689 விசுவாச அறிக்கையையும், திருச்சபை ஆராதனை விதிமுறைகளையும் பத்திரிகை தெளிவுபட விளக்கியது பாராட்டிற்குரியது. மலேசியாவில் என்னுடைய சபை மக்களுக்கும் எனக்கும் மிகவும் பயனுள்ளதாக இருந்து வருகிறது.'' - **போதகர் இந்திரன், மலேசியா**

“திருமறைத்தீப இதழில் போலிப் போதனைகளுக்கு எதிராக வெளிவரும் ஆக்கங்கள் எல்லாம் எந்தவிதமான முகத்தாட்சனியமும் பாராமல், சத்தியத்தின் அடிப்படையில் மட்டும் எழுதப்பட்டு வருவது பாராட்டிற்குரியது. குறிப்பாக போலிப் போதனையாளரையும், அவரது தவறான போதனைகளையும் வேத பூர்வமாகத் தெளிவாக அடையாளப்படுத்தி எழுதிவருவது மிகச் சிறப்பான ஒன்றாகும்.'' - **போதகர் மணிவண்ணன், கீராம்பூர்**

நிறைவாக பத்திரிகையின் ஆசிரியர் போதகர் பாலா தனது சிறப்புரையில், தமிழுலகில் திருச்சபை சீர்திருத்தம் இன்று ஏன் அவசியம் என்பதைப் பழைய ஏற்பாட்டில் எசேக்கியா ராஜாவின் வாழ்க்கையிலிருந்து எடுத்து விளக்கினார். எசேக்கியாவின் சிந்தனையையும், செயற்திறனையும் கொண்டவர்களாக நாம் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இலக்கியப் பணி குறித்து விளக்கிய போது கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படியாக இப்பணிகள் செய்யப்பட வேண்டும் என்றும், எந்த ஒரு தனி மனிதனை மையப்படுத்தியோ, பெருமைப் படுத்தியோ எழுதுவதற்கு இலக்கியத்துறை இல்லை என்ற உண்மைகளை மிக அழகாக விளக்கினார். இறுதியில் திரு. இரவிக்குமார் அவர்கள் விழா விற்கு வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும் நன்றி கூறினார். அதன்பின் அனைவரும் ஐக்கிய விருந்தில் கலந்து கொண்டனர். ஜெபத்துடன் திருமறைத் தீபத்தின் பத்தாண்டு நிறைவு விழா இனிதே நிறைவடைந்தது.

BIBLE LAMP
திருமறைத்தீபம்

**Issue No.4 of 2005**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா
**Editor:** R. Bala
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Sylvia Park, Auckland 1006
New Zealand
**Telephone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

## *என்ன பாவம் செய்தான்?*

*பத்துமாதம் சுமந்து வயிற்றில் தாய்*
*பாசத்தோடு பெற்ற பிள்ளை*
*ஆகா! என்று அரும்பெரும் கனவுகளோடு*
*பெற்றோர் வளர்த்த ஆசைப் பிள்ளை*
*இப்போது விசுவாசிக்கிறான் இயேசுவை*
*என்றறிந்ததும் எக்கேடும் கெட்டுப்போ!*
*தொலைந்துபோ! என்று வசைமாறித் திட்டித்*
*தினமும் முதுகில் பிரம்பால் விளாசி*
*காலால் உதைத்துக் கச்சேரி நடக்கிறது,*
*ஆசையாய் பெற்ற அருமை மகனுக்கு*
*தன்பாவம் போக இயேசுவை விசுவாசித்தான்*
*பெற்றவர்கள் பாசமெலாம் போகுமளவுக்கு*
*அவன் என்ன பாவம் செய்தான்?*

## *சாதிக்கொரு சபை!*


*யூதன், புறஜாதி என்று*
*யாதொரு பேதமுமின்றி*
*யாதும் ஊரே யாவரும் கேளீர்*
*எனுந் தமிழ்மொழிக்கிணங்க*
*தரணி வாழ் மக்களெல்லாம்*
*தன் வார்த்தை வழிப்படி*
*ஒரே குடும்பம் ஒரே மக்களாய்*
*ஒன்றுபட்டு வாழ்வதற்கு*
*உயிர் நீத்தார், உயரெழுந்தார்*
*உத்தமராம் இயேசு கிறிஸ்து!*
*இத்தனையும் தெரிந்திருந்தும்*
*இயேசு வழி அறிந்திருந்தும்*
*சாதிவழி சபை அமைத்து*
*நாடார் சபை, தேவர் சபை*
*பள்ளனுக்கு பரலோகமில்லை*
*என்றியம்பி வாழ்ந்துவரும்*
*எத்தர் கூட்டம் இங்குண்டே!*

## *கவிதை!*

*நெஞ்சக் குமுறல்களை*
*நச்சென்று நாலு வார்த்தைகளில்*
*குறுகத் தரித்துக்*
*கொட்டுவதுதான் 'கவிதை' – சுபி*

# சீர்திருத்த போதனைகளை அளிக்கும் இலக்கியங்கள்













**தொடர்பு முகவரி:**
இவாஞ்செலிக்கள் பாப்திஸ்து சபை
௨௨ டி. பி. கே. மெயின் ரோடு, பைகாரா, மதுரை 6௨500௪
தொலைபேசி எண்: 0௪5௨ 5505810
கிருபை இலக்கிய சேவை, 19 இராஜசிங்க வீதி, கொழும்பு 6

மலர் 11 அக்டோபர் - டிசெம்பர் 2005 இதழ் 4

1. பக்திக்கு விரோதி பாரம்பரியம்

2. இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு

3. கிறிஸ்துவின் வழியில் திருச்சபை ஊழியம் - 2

4. சபையில் பெண்கள் முக்காடிட வேண்டுமா?

5. கிறிஸ்தவக் கோட்பாடுகள்

6. ரோம சபையும், சீர்திருத்த கவுன்சில்களும்

7. பிரசங்கமும், பரிசுத்த ஆவியும்

8. பத்தாண்டு நிறைவு விழா நினைவுகள் - ஜெயபால்

9. கவிதைப் பகுதி - சுபி

Terau Print